KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 வரு செப்டம்பர் மீ 17உ [No. 37.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 721
2. ஆண்டாள்—(கல்வியும் ...த்து...மையும்) E. N. தணிகாசல மு... B.A. B.L. 723
3. மலர்வனம்—விதியில்லா மதிபாலன் "மதுகரம்" 726
4. சிதம்பரதேவர் சரிதம் Dr. V. S. அருணசலம்பிள்ளை 728
5. சூளாமணி - (மந்திரசாலைச் சருக்கம் - 119—124) K. இராமரத்னம் ஐயர் B.A. 730
6. கம்பராமாயணம் (கங்கைப் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. 732
7. சந்தபுராணமும் சங்கநூலும் பண்டிதர் R. திம்மப்பா ஐயர் 734
8. முருகன் நாமம் - க. சோமசுந்தரம் பிள்ளை 736
9. வர்த்தமானம். 739

188935

கலாநிலயம்.

பறப்பது முறந்தியாமே 2.

தேங்கித்தேங்கி மழுகாமல், புத்தறிவு பெருகிவருகின்ற மாந்தரென்போரனைவர்க்கும் ஒருகால் அல்லாக்கால் ஒருகால், 'கடவுள் நம்மைப் படைத்தாரோ, அல்லது நாம்தான் கடவுளைப் படைத்தோமோ' என்னும் ஐயம் மெல்லமெல்ல உருப்பெற்று அவரது வாழ்க்கையைச் சிறிதுகாலமேனும் அலைத்துவைப்பது இயற்கையே. கடவுளைக் காட்டித் தருகின்ற கருவி வேறு — அது உணர்வு. உணர்வினால் எய்தவேண்டிய ஒன்றினை அறிவினால் ஆராய்ப்புகுவது, காதாற் காண்பதும் கண்ணாற் கேட்பதும் போலாம். உணக்குதலின்றி ஈரமுடன் எழுந்து ஓங்கப் பயின்றுள்ள உணர்விற்கு இக்கடவுளென்னும் கருத்து எய்தியவுடன், அதுதான் மெய்யோ பொய்யோ என்றெல்லாம் வாதாடும் வகையொன்றும் நாடாது, இக்கருத்து உதிக்கப்பெற்ற யான் உய்ந்தேன் என்று ஏமாந்து தான் எய்திய இனிமையைப் பிறர்க்குமே புகட்டப்புகும். இவ்வுண்மையைக் கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பர், "மையும் பொய்யும் அறிந்திலன், கண்டவர் உய்யும் உய்யும்" என இராமனைக் கண்டு எண்ணிய மிதிலைமாநகர் மடவரலால் சாதிக்கின்றனர்.

விண்டவர் கண்டிலர் கண்டவர் விண்டிலர், என்னுமிவ்வழக்குக் கடவுள்திறத்தில் சிறந்தமான செய்தியாவது சரதம். ஆதலின் அவனது உண்மையை விண்டுரைக்க யாம் இங்குப் புகுந்திலம். ஆயினும் அக்கடவுள் இருக்கவியலாது என்னும் எதிர்மறைச்சொல்லைச் சிறிது ஆராய்ச்சியால் வறியதாக்கிக் காட்ட இயலும். இல்லையேபோல் இருந்து நம்மனதால் எட்டமாட்டாத் தனிநிலையே அக்கடவுளின் பெருமைக்கு உரியதாம் அசர்சான்றாகும். கணிதநூலால் குறிக்கவல்ல பேரெண் எதுவென்று கேட்கின்றார் ஓர் வித்தகர். எவ்விடை உரைப்போம். பதினாயிரங் கோடிகோடி என்றாலும் அதன்மேலும் ஒரெண் இருக்கக்கூடுமன்றோ. அப்படியே எண்ணியெண்ணிப் பார்க்குமளவில் அத்தனைக்கு அத்தனை அதிகமாய ஓர் எண் இருக்கக்கூடுமென்பது எளிதிற் புலப்படும். இருக்கக் கூடுமென்பது உண்மையேயாக இருக்கும் அவ்வெண் யாதென்று இயம்புவதோ எங்ஙனுமில்லை. ஆதலால் எண்கட்கு இல்லையென்பதா, அல்லது எண்ணிற்குக் கணிதநூல் கண்டுரைத்த குணங்கள்தான் இல்லையென்பதா? இல்லையெனில் மதியின் பிழை யதுவென்றி எண்ணின் பிழையுமன்று, கணிதத்தின் பிழையுமன்று. கடவுளின் தன்மையும் அன்னதேயாம். தாயுமானவர் 'எண்ணே' என்று பரம்பொருளை அமைத்ததன் இரகசியமும் அன்னதே. இக்கணிதநூ லாராய்ச்சியினால் கடவுளின் உண்மையை நிலைநிறுத்த நினைக்கின்ற தத்துவநூலாசிரியர் போலாவது நாம் போகவேண்டிய அவசியமில்லை... கருதுகின்ற வேறோர் தத்துவநூல் ஆசிரியர் 'லிட்னிஸ்' என்பவர் இவ்வாதத்தை இன்னும் எளிதாக்குகின்றார். கடவுள் என்றவொருவன் இருக்கின்றானென்பதை நிலைநாட்ட வழக்கும் ஆஸ்திகவாதங்களெல்லாம் ஒருபுறமிருக்க, அவன் ஏன் இருக்கவியலாது என்று ஓர் கேள்வி கேட்கின்றார். கடவுள் உண்டு என்னுங் கொள்கையை உரைக்கவருகின்ற ஆஸ்திகர்கள் உரைதடுமாறித் தம் உணர்வின் தோற்றத்தைச் சொல்லால் அறி

உ211,1428KN
N31.437

வுறுத்தமாட்டாமல் ஒவ்வொருபோது திகைத்துநிற்கவும் நேரலாம். மற்றினி, தம்மறிவும் தாமுமே பெரியரென்று கருதிய நாத்திகவாதிகள், ஸிப்னீஸின் கேள்விக்கு என்னபதில் உரைக்கவல்லார். கடவுளென்றொருவன் ஏன் இருக்கவியலாது? எண்களிலெல்லாம் பேரெண் யாதென்று கேட்ட டேக்கார்ட்டின் (Descartes) கேள்வியேபோல் ஸிப்னீஸின் இந்தக் கேள்வியும் முதற்பார்வைக்கு மிகமிகச் சுலபம் போன்றவோர் வஞ்சனைத்தோற்றமுடையது. இவ்வளவு சுலபமான கேள்விகளால் தம் கொள்கையின் உண்மையை உணர்த்தவல்ல கல்வியும் நுண்ணறிவும் உடைமையாற்றான் அன்னோர் இவ்வுலகிற்கு ஒருவரெனும்படி வித்தகராய் விளங்குகின்றனர். ஏன் கடவுள் இருக்க முடியாது? சிந்தித்துப் பாருங்கள். ஒருவன் தன் ஆயுள்நாளனைவும் இதே சிந்தனையில் ஆழ்ந்துகிடந்தாலும் அந்தத்தில் கடவுள் இருக்க இயலாதென்பதற்குச் சார்பாய் ஒருசொல் சொல்லற்கும் வகையறியான். எனவே கடவுள் இருக்கஇயலாதென்பதைச் சாதிக்கமாட்டாமையால் அக்கடவுள் இருக்க இயலும் என்று கொள்ளவேண்டுவது கடனாகின்றது. இனி, கடவுளின் உண்மையை எய்துதற்கு எஞ்சிய படி ஒன்றே. கடவுள் இருக்கக்கூடுமாயின் அவர் இருக்கவும் இருக்கின்றார் என்னும் உறுதி ஸிப்னீஸின் தத்துவமுறைக்குரிய முடிவாகின்றது. ஆகையால் கடவுள் இருக்கின்றார் என்பாரவர்.

இத் தத்துவமுறையிலும் அதன் முடிவிலும் சிலருக்கு விளையக்கூடிய ஐயந்திரிபுகளைத் தீர்ப்பதற்கு இவ்விடயத்தை இன்னுஞ் சிறிது தொடரவேண்டும். உண்டு என்பதற்கு ஒரு பொருள் இலக்காகவேண்டும் என்பது எவ்வளவு இன்றியமையாததோ அத்துணை இல்லையென்பதற்கும் ஒருபொருள் இலக்காகவேண்டுமென்பதும் இன்றியமையாததேயாம். இதன்படி 'கடவுள் இல்லை' என்னும் வாசகமே அவன் இருக்கின்றான் என்பதை உறுதிப்படுத்துகின்றது. இல்லாத ஒரு பொருளை இருக்கின்றதென்று உரைப்பது எத்துணையியலாதோ அத்துணையே இல்லாத ஒரு பொருளை இல்லையென்று உரைப்பதும் இயலாது. இங்கு இதன் உண்மையை மயங்குதல் இன்றித் தெளிந்துகொள்ள நாம் இரண்டொரு விடயங்களைக் கருத்துள் காக்கவேண்டும். ஒரு பொருளானது பெரும்பாலும் அதற்குரிய இடம் காலம் சினை குணம் தொழில் ஆகிய இவைகளைச் சார்ந்தே கருதப்படுகின்றது. நாம், இல்லையென்று இயம்ப இயலாதது தன் தனித்தன்மையில் இருக்கும் ஒருபொருளையேயன்றி மற்ற ஐந்தினையும் தழுவிய விகற்பத்தால் விளைகின்ற தோற்றத்தையன்று. பத்துத்தலையுடைய சிங்கம் இல்லை என்னுங்கால் இல்லாதபொருள் ஒன்று இல்லையென்று இயம்பப் பெறவில்லையோ என்று சிலர் எண்ணலாம். இது தவறு. சிங்கம் என்ற பொருளுமுண்டு, தலையென்ற சினையுமுண்டு; ஆனால் பத்துத் தலையுடைய சிங்கத்தின் விகற்பம் இல்லையென்பதே இவ்வாக்கியத்தின் கருத்து. அப்படியே, பாடுகின்ற கல் இல்லை என்னுமிடத்தும், கல் என்னும் பொருளும், பாட்டு என்னும் தொழிலும் உண்மையேயாக, அப்பாட்டென்னும் தொழிலைச்சார்ந்த கல்லென்னும் பொருளின் விகற்பமே மறுக்கப்படுகின்றதென்பது வெளிப்படை. இவ்வண்ணம் உதாரணங்கள் பல பெருக்கவேண்டா. இன்னபடி மற்றவற்றோடு சாராமல் தன் தனிநிலையிலேயே தானாக இல்லாத ஒரு பொருளை இல்லையென்று சொல்ல இயல்கின்றதோவென்று சோதித்துப்பாருங்கள். எதிர்ப்பட்டோரையெல்லாம் இல்லாத பொருளொன்றை இயம்பும்படி கேட்டுப்பாருங்கள். இதுவும் முதலில் மிகவும் சுலபம்போல் தோன்றும். பிறகு முயலமுயல அதன் உண்மையும் மெல்லமெல்ல மனத்தகத்தே மலர்வதாகும். எனின், இல்லாதபொருளை இல்லையென்று இயம்ப முடியாதாகையால், இல்லையென்று இயம்பப்படும் ஒரு பொருளும்—பொருளே, அதன் விகற்பமன்று—இருக்கவேண்டு மென்பதே இன்றியமையாததாய் முடிகின்றது. ஆதலால் இருக்கின்றபொருளை இல்லையென்பதைக் காட்டிலும், இல்லாதபொருளை இல்லையென்பதே கடினமாகின்ற விந்தையிதனை விளம்பியபின் தெளிந்துகொள்ளல் அருமையாகாதென நினைக்கின்றோம். இக்கருத்தைக் கடவுளோடு சார்த்திச் சோதித்துப்பார்க்குமிடத்து விளையும்பயன் சிறியதன்று. கடவுள் இல்லை என்ற எதிர்மறை வழக்கு இயம்புதற்கு இயல்வதாகிய காரணம் ஒன்றே. அவ்வாறு இல்லையென்று இயம்பப்படும் பொருள் ஒன்று இருக்கத்தான் வேண்டும் என்று சாதிப்பதாய் முடிகின்றது. ஆதலின் இவ்வெதிர்மறை வாசகம் தன்னையே தற்கொலைபுரிந்துகொள்ளுகின்றதென்னலாம்.

கடவுள் உண்டென்னும் உடன்பாட்டினை நம்முடைய உள்ளுணர்வு ஒன்றினாலேயே உய்த்துணர வல்லவர்களாயிருக்க அக்கடவுள் இல்லை என்ற எதிர்மறையை நுண்ணிய அறிவினால் நீக்கிவிட வல்லவர்களாகின்றோம். இவ்விருவாற்றானும் எஞ்சி நிற்கின்றது அவ் வலகிலாப் பரம்பொருள். இப்படி உண்டு என்று உரைப்பதைக்காட்டிலும் இல்லை என்று மறுப்பதனால் அப்பரம்பொருளினுடைய உண்மை உறுதிப்படுவதாதலால் மறுப்பதிலும் உண்டோர் உறுதியென்று இச்செவ்வியில் கூறத்துணிகின்றோம். இதுவன்றி அப்பரம்பொருள் இல்லை என்று தாமும்மறுத்துப் பிறரையும் மறுக்கும்படி செய்கின்ற முயற்சியால் நற்பயன்பெரிது இக்காலமாந்தருக்குளெய்தலாம் என்று எண்ணவும் துணிகின்றோம். இவ்வாக்கியம், நாஸ்திகர் நாவாலும் இயம்பத்தகாததோர் தீமையைத் தாங்கி நிற்கின்றதெனச் சிலர் நினைக்க நேரலாம். எனினும், இறுதியில் கடவுள்வழிபாட்டிற்குக் கைகாட்டி அழைத்தேகும் வழிகளில் நாத்திகமும் ஒன்றென்பது நாம் காட்டுங் காரணங்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாயிருக்குமென நினைக்கின்றோம். அவ்விடயத்துள் புகுமுன் வேறொரு விடயத்தைச் சிறிது கருதி விலக்கவேண்டியிருக்கின்றது.

இரஷ்ய சோவியத்தார்களும், அவர்களைப் புலியெனக் கருதித் தாமும் சூடுபோட்டுக்கொள்ள வேண்டுமென்று நெடிது விழைகின்ற இத் தமிழ்நாட்டின் சில பகுதியோரும் கடவுள் இருக்கின்றார் என்ற நம்பிக்கை எப்பயன் கருதி ஒழியவேண்டுமென்று இயம்புகின்றார்கள் என்பதை அதிகமும் ஆராய்ச்சியின்றியே தெரிந்துகொள்ளலாம். கடவுளைச் சார்ந்த மதங்களுக்கிடையே நிகழும் வேறுபாட்டினால் பல்வேறு மதத்தினர்கள் ஒருவரோடொருவர் ஒற்றுமையுணர்ச்சி எய்தப்பெறாதவர்களாய்ப் பிரிந்து பிரிந்து அகன்று உலகத்திலே ஏற்றமும் தாழ்வும் இகலுமே நிலைத்திருக்க ஒருவருக்கும் சுகம் இல்லாமற் போகின்றது

என்பது இவர்கள் காட்டும் காரணமாகும். கடவுள் இருக்கின்றவரையிலே மதங்களும் இருக்கவேண்டியது அவசியமாகின்றதென்றும், மதங்கள் இருக்குமாயின் அவைகள் மாறுபடவேண்டியது இன்றியமையாததென்றும், எதிர்த்து ஒருவரோடொருவர் பூசல்கள் புரியாக்காலையிலும் 'தான் வேறுமதத்தினன், அவன் வேறு மதத்தினன்' என்னும் நினைவே அவ்விருவருடைய நட்பிற்கு இடையூறுகின்றதென்றும் இப்படியே உலகனைத்தும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள்போல் சமத்துவமும் சுதந்திரமும் சகோதரவாஞ்சையும் உடையராய் எல்லாரும் இனிது வாழ்வதற்கு வகைகாண முடியாமற் றீர்கின்றதென்றும் செப்பித்திரியும் இவர் மதியை என் சொல்லி வியப்பதே. மனிதர் தம்முள் இகல்வதற்குக் கடவுளா காரணம்? மற்று இகல்வதற்கா கடவுள் காரணம்? இரண்டுமில்லையே. ஒரே மதத்தின் ஒரே பிரிவினர், ஒரே மதத்து ஒரே பிரிவின் ஒரே குடும்பத்தினர், அவ்வொரே குடும்பத்தின் ஒருதாய் வயிற்றினர் என்னும் இவரெல்லாம் தம்முள்ளே வெறுப்பும் இகலுமின்றி வாழ்கின்றவர்கள் ஆனபின்னன்றோ வேறுவேறு ஜாதியையும் மதத்தையும் சேர்ந்தவர்களுக்கு இடையே நட்பில்லா நிகழ்ச்சிக்கெல்லாம் கடவுளையும் மதத்தையும் காரணமாய்க் கூறுதற்கு வாயுண்டு. இருவேறு சமயத்தினர் பூசலிடுவாராயின் அவ்விருவரும் துஷ்டர்கள் என்பதொன்றையே அது குறிக்கின்றதன்றி வேறொன்றிற்கும் ஆதாரம் ஆவதில்லை. இந்தத் துஷ்டத்தனத்திற்கும் உண்மையான காரணந்தான் யாதென்று ஆராயப்புகுவோமாயின் அவ்விருவரும், கடவுள் உணர்வையேனும், தத்தம் மதத்தின் அறிவையேனும் அணுவளவும் அடையாதவர்கள் ஆவதாய் முடியும். அறிவுடையார்க்கு இதனைக் கூறுவதும் மிகை. அறிவிலார்க்கு எத்துணை விளக்கிக் கூறியும் பயன்படாது. ஆதலின் இதனை எடுத்துப் பலபட நாமிங்கு விரித்துரைக்க வேண்டியதில்லையென விடுகின்றோம்.

ஆண்டாள்

2. கல்வியும் கவித்திறமையும்.

[708-வது பக்கத் தொடர்ச்சி]

iv. மருதம்

இது பழனமும் பழனத்தைச் சார்ந்த இடமுமென்பர். பழனத்தைச் சார்ந்தே நகர்களமையுமாதலால், நகர்வர்ணனை மொழியும் பதிகங்களில் கோதையார் மருதநிலக்கருப்பொருள்களையே* காட்டுகின்றார். இந்நிலத்திற்கு ஆறுபெரும்பொழுதும், †சிறுபொழுதில் வைகறையும், ‡காலையும் சிறந்தனவென்று கருதுவர் ஆன்றோர். அவ்வாறே ஆண்டாள் திருப்பாவைமுற்றும் வைகறையில் துயில்நீத்து நீராடப்போகும் காலைக்கடனைத் தூண்டுகின்றார். முதல்திருமொழியிலும் தரைவிளக்கித் தண்மண்டலமிட்டு நுண்மணற் கொண்டு தெருவணிவது, வெள்வரைப்பதன்முன் துறைபடிவதற்கன்றோ? கோழியழைப்பதன் முன்னர் நீராடப் போதல் மூன்றாம் திருமொழியில் காணப்படும். பன்னிரண்டாவது 'மற்றிருந்தீர்-' திருமொழியும், "நந்தகோபாலன் கடைத்தலைக்கே நள்ளிருட்கண் என்னை உய்த்திடுமின்" * என்றதும், "காளியனுச்சியில் நட்டம் பாய்ந்து போர்க்களமாக நிருத்தம் செய்த பொய்கைக்கரைக்கு என்னை யுய்த்திடுமின்" *என்றதும் வை

* இந்திரன் ஊரன் பைந்தார் மகிழ்நன்
கெழுதகு கற்பிற் கிழத்தி மனைவி
உழவ ருழத்தியர் கடையர் கடைச்சியர்
மழலை வண்டான மகன்றி னாரை
யன்னம் போதா நன்னிறக் கம்புள்
குருகு தாரா வெருமை நீர்நாய்
பெருகிய சிறப்பிற் பேரூர் மூதூர்
யாறு மனைக்கிண றிலஞ்சி தாமரை
காவிதழ்க் கழுநீர் நறுமலர்க் குவளை
காஞ்சி வஞ்சி பூஞ்சினை மருதம்
செந்நெல் வெண்ணெல் வந்தெ லரிகிணை
மன்றன் முழவ மருதயாழ் மருத
மன்றணி விழாக்கோள் வயற்களை கட்ட
லரிதல் கடாவிட லகன்குளங் குடைதல்
வருபுன லாடன் மருதக்கருப் பொருளே.

இலக்கண விளக்கம் - 391.

† கூதிர் யாம முன்பனி யென்றிவை
யோதிய குறிஞ்சிக் குரிய காதலும்
வேனி னண்பகல் பின்பனி யென்றிவை
பான்மை யினுரிய பாலைக் கேற்றலு
மல்குயிர் மாலை முல்லைக்கு வகுத்தலு
மருத நெய்த லென்றிவை யிரண்டற்கு
முரிய பெரும்பொழு தாறெடு முறையே
வைகறை விடியன் மருதத்திற் குறுதலும்
வெய்யோன் பாடு நெய்தற்குச் சிறத்தலு
மெய்து மென்மனா ரியல்புணர்ந் தோரே.

ஷை - 386.

‡ வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று
புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே
பள்ளிக் கிடத்தியோ பாவாய் நீ நன்னாளால்
கள்ளந் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்.

திருப்பாவை - 13 - வரி. 4 - 9.

* தந்தையுந் தாயுமுற் றாரு நிற்கத்
தனிவழி போயினா ளென்னுஞ் சொல்
வந்தபின் னைப்பழி காப்பரிது
மாயவன் வந்துருக் காட்டுகின்றான்
கொந்தள மாக்கிப் பரக்கழித்துக்
குறும்பு செய்வானோர் மகனைப்பெற்ற
நந்தகோ பாலன்க டைத்தலைக்கே
நள்ளிருட் கண்ணென்னை யுய்த்திடுமின்
ஆர்க்கு மென்னோயி தறியலாகா
தம்மனைமீர் துழதிப் படாதே
கார்க்கடல் வண்ணனென் பானொருவன்
கைகண்ட யோகம் தடவத்தீரும்
நீர்க்கரை நின்ற கடம்பையேறிக்
காளியனுச்சியில் நட்டம் பாய்ந்து

களைப்பொழுதையே குறிக்கும். ஏனெனில் அதன் திருக்கடைக்காப்புச் செய்யுளில் கண்ணன் திருப்பதிகளையே † குறித்தனளென்று கோதையார் மொழிவதால் மருதநிலப்பொழுதே பொருந்து மென்க.

ஆண்டாள் மருதநிலக் கருப்பொருள்களைக் காட்டுவதைச் சற்றுக் கவனிப்போம். கருப்பொருள்களிற் சிறந்தது தெய்வம். மருதநிலத் தெய்வமாகிய இந்திரன், * அந்நிலத்தில் விழாக் கொண்டாடல் மிகவுஞ் சிறந்தமையாதலாலும், பைந்தார் மகிழ்நன் கற்பிற் கிழத்தியுடன் திருமணம் புணர்தல் எல்லா விழாவுக்கும் மேலானதாதலாலும், ஆண்டாள் தன் ஸ்தூலசரீரத்துடன் அச்சுதனை யிக்காலத்தில் மணத்தல் ஏலாதாகையாலும், சூட்சும சரீர அவஸ்தையில், கோதையாரை மணம்பேசிக் கோவிந்தனுக்குத் திருக்கலியாணம் செய்விக்கின்றான். "வாரணமாயிரம்" என்னும் 6-ம்திருமொழி முற்றும் பெருகிய சிறப்பிற் பேரூர்மூதூர் பெருமக்கள் திருமண இலக்கணத்தை விளக்கிக் காட்டும். பொற்கலசங்கள் வைத்துத் தோரணங்கள் கட்டிப் பாளைவிடும் கமுகு முதலியன கட்டியிருக்கும் திருப்பந்தரில்மந்திரக்கோடியுடுத்தி,காப்புக்கட்டிமத்தளங் கொட்ட, சங்குகள் முரல, வாக்குச் சுத்தமுள்ள நல்ல பார்ப்பனர் மந்திரமோதக் கண்ணன், கோதையாரைக் கைப்பற்றித் தீவலஞ்செய்து,அம்மி மிதிப்பித்து, இருவர் கையும் ஒன்றின்மே லொன்றாய் நிற்கப் பொரிமுகம் தட்டி மங்கலவீதி வலஞ்செய்து ஆனைமேல் அவனுடன் திருமஞ்சனமாடவும், கனவு முற்றிற்று. ஏனெனில் மக்கள் மணம்போல் இது பள்ளியறையில் முடிவுகாட்டும் மணமன்று. உலக இச்சையும், உலக மாயையும் ஒழித்த திருமஞ்சனமே முடிவு. இதைப் பெற்றதே மறுபடியும் பிறந்ததாகும்; இனிப் பிறவாத் தன்மையுமாகும். மற்று மிதையே அன்பில் மூழ்குவதென்னலாம்.

மற்றிருந்தீர்கட் கறியலாகா மாதவ
னென்பதோ ரன்பு தன்னை
உற்றிருந்தேனுக் குரைப்ப தெல்லா
மூமையரோடு செவிடர் வார்த்தை
பெற்றிருந்தாளை யொழிய வேபோய்ப்
பேர்த்தொரு தாயில் வளர்ந்தநம்பி
மற்பொருந் தாமற் களமடைந்த
மதுரைப்புறத் தென்னை யுய்த்திடுமின்

என்பதிலும், கடவுளும் அன்பும் ஒன்றேயென்பதும், இதில் அபேதமில்லை யென்பதும் ஆண்டாள் காட்டுகின்றார். திருப்பாவையில் முதற்செய்யுளில், கூறியுள, "நாராயணனே நமக்கே பறைதருவான்" என்றது மணப்பறையைக் குறிக்கும். * இதை "மன்றன் முழவமாயும்" கொள்ளலாம்.

பாரோர்புகழ வைகறையில் எழுந்து பொய்கையிற் குளித்து, பிறகு இல்லஞ்சேர்ந்து கண்களுக்கு மை தீட்டி, கூந்தலுக்கு மலரிட்டு முடித்து, முள்ளிலாச் சுள்ளியால் போனகமமைத்து வாழும் பெண்டிரமைந்த தேசம்,

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்குபெருஞ் செந்நெ லூடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம்"

நிறைந்து விளங்கு மென்றார். இச்செல்வத்தையே மீண்டும், மருதநிலத்திற்குச் சிறப்பானமிருகம் எருமையாதலால், அதற்குத்தக்கவாறு

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்று பால்சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்
பனித்தலை வீழ நின்வாசற் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய்

என்று எருமைப்பால் மிஞ்சும் செல்வத்திலுழல்கின்ற நாணுதநாவுடைய நங்கைகளை இனிதுநோக்கி, "நீங்கள் விழித்துக்கொண்டிருக்கும்போது சுவர்க்கத்திற்கு இப்போதே புகுவதுபோல் பேசுகின்றீர். உமது இயம நியமங்கள் கும்பகர்ணனைத் தோற்றுவிக்கும் பெருந் துயிற்றெழிலோ" என்று கோதையார் ஏசுவார்.

இவ்வாறு செல்வம் நிறைந்த * ஊரில் மலர்மேல் வண்டினங்கள் தொங்குவதும், பொய்கையில் தாமரை

பேர்க்கன மாகநி ருத்தம்செய்த
பொய்கைக் கரைக்கென்னை யுய்த்திடுமின்
12-வது திருமொழி (மற்றிருந்தீர்) 3&5

† மன்னு மதுரை தொடக்கமாக
வண்துவ ராபதி தன்னளவும்
தன்னைத் தமருய்த்துப் பெய்யவேண்டித்
தாழ்குழ லாள்துணிந்த துணிவைப்
பொன்னியல் மாடம் பொலிந்துதோன்றும்
புதுவையர் கோன்விட்டு சித்தன்பேதை
இன்னிசையால் சொன்ன செஞ்சொன் மாலை
ஏத்தவல் லார்க்கிடம் வைகுந்தமே. ஷை-10

* சந்திரமண் டலம்போல் தாமோ தரன்கையில்
அந்தரமொன் றின்றி யேறியவன் கையில்
மந்திரங்கொள் வாயே போலும் வலம்புரியே
இந்திரனும் உன்னொடு செல்வத்துக் கேலானே.
7-வது திருமொழி (கருப்பூரம் நாறுமோ) 4.

* மத்தளம் கொட்ட வரிசங்க நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழிநான்.
6-வது திருமொழி (வாரணமாயிரம்) 6.

* ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே அறிவுறாய்
ஊற்ற முடையாய் பெரியாய் உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே துயிலெழாய்
மாற்றார் உனக்கு வலிதொலைந்துன் வாசற்கண்
ஆற்றாது வந்துன் னடிபணியு மாபோலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய்
திருப்பாவை - 21.

கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா வுன்றன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சன்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடையு டுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.
ஷை - 27.

மேல் அன்னம்† உலாவுவதும்,‡ சோலையிற் குயில்கள் பாடுவதும், ஆண்டாள், இயற்கைப் பொருள்களின் தோற்றங்களைக் காட்டும் கலையிற்சிறந்த பாகமாகும்.$ கடவுளழகே யியற்கை அழகாய்ப் பூத்து விளங்கும்.

இவ்வழகை * வியக்கத்தக்க கலைப்பயிர்ச்சியின்மையால், நாம் அதை அநுபவிக்க முடியவில்லை. "தங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள், செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல் வாய்கூம்பின" விஷயம் எவர் கண்டனுபவிக்கின்றார்? "கள்ளவிழ் செண்பகப் பூமலரையும்", "தேங்கனி மாம்பொழில் செந்தளிரையும் கோது மிளங்குயில் கொத்தலர் காவில் மணித்தடம் கண்படை கொள்ளும்" இயல்பையுங் கண்டு களிக்கும் கண்களன்றோ, இயற்கையின் அழகிய தோற்றத்தைக் கண்டு ஆநந்திக்கும்.

மருதநிலத்திலுள்ள மரம் பூ புள் விலங்கு முதலிய கருப்பொருள்கள் இயற்கையில் விளங்குவதுபோல், நீராடல், † உழுதல், § களைகட்டல் முதலியவைகளை உருவகத்திலும் உவமைகளாலும் ஆண்டாள் விளக்குகின்றார். எதை யெடுத்துப் பாடினும் அதன் தத்துவ முடிவு ஒன்றேயாம்.

மாலே மணிவண்ணா மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்த வுன்பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலி னிலையாய் அருளேலோ ரெம்பாவாய்.
(திருப்பாவை 26).

என எதைக்கருதினும் இறைவன் திருவருளிலேயே கொண்டுமுடியும் இவ்வம்மையார் சித்தம்.

அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்க மிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே
செங்கட் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ
திங்களு மாதித் தியனு மெழுந்தாற்போல் [யேல்
அங்கணிரண்டுங் கொண்டெங்கள் மேல் நோக்குதி
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய்
திருப்பாவை 22.

கோதையார் மருதநிலக் கருப்பொருளைப் பாடுமிடத்தும் * உரிப்பொருளைக் குறிக்குமிடத்தும், "சிறுமானிடவர்" செய்தி யொன்றுமில்லை. வெளிப்படையாய்,

பாடுங் குயில்காள் ஈதென்ன பாடல் நல்வேங்கட
நாடர் நமக்கொரு வாழ்வு தந்தால் வந்து பாடுமின்
ஆடும் கருளக் கொடியுடையார் வந்தருள் செய்து
கூடுவாராகில் கூவிநும் பாட்டுக்கள் கேட்டுமே.

என்றனர்.

(10-வது திருமொழி கார்க்கோடல் பூக்காள்-5)

† செங்கமல நாண்மலர்மேல் தேனுகரு மன்னம்போல்
செங்கண் கருமேனி வாசுதே வனுடைய
அங்கைத் தலமேறி அன்னவசஞ் செய்யும்
சங்கரையா உன்செல்வம் சால வழகியதே.
7-வது திருமொழி (கருப்பூரம் நாறுமே) 7.

‡ பைங்கிளி வண்ணன் சிரீத ரனென்பதோர்
பாசத் தகப்பட் டிருந்தேன்
பொங்கொளி வண்டிரைக் கும்பொழில் வாழ்
குயிலேகுறிக் கொண்டிது நீகேள்
சங்கொடு சக்கரத்தான் வரக்கூவுதல்
பொன்வளை கொண்டு தருதல்
இங்குள்ள காவினில் வாழக்கருதில்
இரண்டத் தொன்றேல் திண்ணம்வேண்டும்.
5-வது திருமொழி (மன்னுபெரும் புகழ்) 9.

$ எழிலுடைய வம்மனையீர் என்னரங்கத் தின்னமுதர்
குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில்
எழுகமலப் பூவழகர் எம்மானார் என்னுடைய
கழல்வளையைத் தாமும் கழல்வளையே யாக்கினரே.
11-வது திருமொழி (தாமுகக்கும்) 2.

* i கார்க்கோடல்பூக்காள் கடல்வண்ண னென் மேலும்மைப்
போர்க்கோலஞ் செய்து போர்விடுத்தவ னெங்குற்றான்
ஆர்க்கோ வினிநாம் பூசலிடுவது அணிதுழாய்த்
தார்க்கோடும் நெஞ்சந்தன்னைப் படைக்கவல்லே னந்தோ!

ii மேல்தோன்றிப் பூக்காள் மேலுலகங்களின்மீதுபோய்
மேல்தோன்றும் சோதி வேத முதல்வர் வலங்கையில்
மேல்தோன்று மாழியின் வெஞ்சுடர் போலச் சுடாதெம்மை
மாற்றோலைப் பட்டவர் கூட்டத்து வைத்துக் கொள்கிற்றிரே
(கார்க்கோடல் பூக்காள்)10-வது திருமொழி 1, 2.

† போய்த்தீர்ந்த மாடாதே நின்றபுணர் மருதம்
சாய்த்தீர்த்தான் கைத்தலத்தே யேறிக் குடிகொண்டு
சேய்த்தீர்த்த மாய்நின்ற செங்கண்மால் தன்னுடைய
வாய்த்தீர்த்தம் பாய்ந்தாட வல்லாய் வலம்புரியே.
7-வது திருமொழி (கருப்பூரம் நாறுமோ) 6.

‡ தொழுதுமுப் போதுமுன் னடிவணங்கித்
தூமலர் தூய்த்தொழு தேத்துகின்றேன்
பழுதின்றிப் பார்க்கடல் வண்ணனுக்கே
பணிசெய்து வாழப்பெ றாவிடில்நான்
அழுதழு தலமந்தம் மாவழங்க
ஆற்றவும் மதுவுனக் குறைக்குங் கண்டாய்
உழுவதோ ரெருத்தினை நுகங்கொடுபாய்ந்
தூட்டமின் றித்துறந் தாலொக்குமே.
முதல் திருமொழி (தையொருதிங்கள்) 9.

* ஊடல் கூடல் உணர்தல் புணர்தலை
நீடு நின்ற நிறைபுக ழாய்ச்சியர்
கூட லைக்குழல் கோதைமுன் கூறிய
பாடல் பத்தும்வல் லார்க்கில்லை பாவமே.
4-வது திருமொழி (தெள்ளியார் பலர்) 11.

மலர்வனம்.

[715-வது பக்கத் தொடர்ச்சி]

விதியில்லா மதிபாலன்.

அழுதரற்றுமவ் விளவிரனது மொழிகளைக் கேட்ட உருத்திரசூரன் சிந்தனையுளாழ்ந்தான். பண்டை நினைவுகள் பலப்பல அவனுள்ளத்திலெழுந்தன. எனினும், தான் செற்ற அவ்விளையோன் தன்னொரு மகனெனுங் கருத்து அவன்பால் விளையவில்லை. மகதர் மாநகரிலே தனக்குப் பிறந்ததோர்பெண்ணே யென்ற உறுதி, வேறோர் நினைவு எழவொட்டாமல் தடுத்து நிற்பதாலவனென்செய்வான். மகனெனில் அமர்க்களத்திற் கொண்டேகித் தமியளாய்த் தன்னை உருத்திரசூரன் விடுவானேயென் றஞ்சிய அத் தாய்மையின் பேதைமை, பெண்ணே பிறந்ததென்று பண்டுபோக்கிய பொய்யுரையை அயிர்த்திலனிவன். ஆதலின், உருத்திரசூரன் மகனென்னும் பெருமைவேண்டிப் பொய்யுற விதனை இச்சிறுவன் புனைந்துகொண்டனனே, அல்லது பெருகிய அவன் புகழிற்கோர் மகுடமா யிவ்வுறவைப் பிறர் சூட்டினர்களோ என்றையுற்றனத் தந்தை. ஆயினு மவனுள்ளங் கலங்கியது. கடலுடைந்து பெருகினுலென்ன அவன் கண்கள் பொங்கிக் கலுழ்ந்தன. மதுகர மினிதுபாட மயிலினங்கள் கூடியாடு மோர்ப் புதுமலர் பொதிபவிழ் பொழில்வளத்தினைச் சேணின்று காணுமொருவன்போல், உருத்திரசூரன் தான் இளமையில் துய்த்த இன்பநலங்களின் தோற்றங்கள் நினைவெனும் படாத்தினியங்கக் கண்டனன். வெற்றிமாலையுடன் மீண்டுவருந் தன்னை மகதர்மன்னவன் மதித்தளித்த நிதிக்குவைகளும், மனைவதியுடன் களவொழுக்கங்கள் இழைத்துவந்துபின் கடிமணங் கொண்ட செவ்வியும், இல்லிருந்த அவ்விரண்டுமூன்று திங்களின் இணையிலாத வின்பமும் கனவினும்மிகக் கூர்மையாய் அவன் கருத்தினிலுருக்கொண் டெழுதலும் இனைந்தினைந்து, வயதினும் வாய்ந்தநல் வடிவினுலும் தன்னரும் புதல்வனே ஆதற்கொத்தவவ் விளவலை இரங்கிநோக்கினன். நோக்கி,

“ஓ, மதிபால, உருத்திரசூரனுக்கு வாய்த்தவனுயின் நீ அவனுடைய காதன்மைந்தனுதற்கு நனிமிகத் தக்கோனே, திண்ணம். எனினும், மதிபால இதனில் யாதோ பிழை செய்கின்றாய். மற்று மனிதர் நினக்கோர் பொய்புகன்று வைத்திருப்பினு மிருக்கலாம். ஏனெனில், உருத்திரசூரனுக்குப் புதல்வன் இருந்ததில்லை. பிறந்த மகவொன்றே, அதுவும் மகள்: அன்னுள் இப்பொழுது நம்மையும் நம் போரையும் நம் கொலையையும் பற்றி நினையாது அங்கநாட்டிலே தன் தாயுடன் இனிது வாழ்கின்றாள்”

என்று பகர்தலும் மதிபாலன் சீற்றமுடன் சிலசெப்பலானான். ஆழ்ந்திருந்த அவ் வெவ்வேலின் கடுந்துயர் அதிகமாயிற்றேனும் அதனை அகற்றிப் பெருக்கிய சோரியோடுந் தன்னுயிரைப் போக்காமுன்னம், திண்ணிய தன் பகைவனுக்கு உண்மையை உணர்த்த அவாவினனாய், ஒருகரத்தைத் தரையிலூன்றிச் சிறிது நிமிர்ந்து,

“என்னுரையைப் பொய்யென மறுக்கும் யாவனோ ஒரு நீ. இறப்பவர் நாவினில் மெய்ம்மையே நிற்குங் கண்டாய். மற்று, பண்டுமென் நாப் பொய்பயின்றறிந்ததில்லை. ஒன்றுனக்கி யானின்றுரைக்கக் கேள். பெற்றமகவிற்குப் பூட்டுவாயென்று உருத்திரசூரன் என் தாயின்கையில் தந்தகன்ற தொடியினையுடையது என் தோள்”

என விளம்பினன். பனிவரை யிதுவென உருத்திரசூரன் முகம் விளர்த்தது. கால்கள் நடுங்கின. கைகளைக் கொட்டித் தன் வன்மார்பில் அறைந்துகொண்டு, “மதிபால, ஒருபோதும் பொய்க்காத நற்பெருங் கரியது ; காட்டுவாயேல் பின் உருத்திரசூரனுக்குதித்தவொரு பெருமகனே நீ” எனக் கிணற்றினின்று வருவதே யனையவோர் குரலினுல் நவின்றனன்.

இதுகேட்ட மதிபாலன் தளர்ந்துநையுந் தன் விரல்களால், தோள்மறைத்த வாரினை விரைந்தகற்றி, உருத்திரசூரன் ஒரு தனிப்புதல்வனே தானெனற் குரியதோர் கரியினை குறித்துக்காட்டி, “என்னினி இயம்புவாய். உருத்திரசூரனுக்கோ வேறொருவனுக்கோ மகனுகுஞ் சான்று சாற்றுகின்றதிது?” எனக்கழறினன்.

இமைத்திலன், இசைத்திலன், அசைந்திலன், திகைத்து நின்றனன் உருத்திரசூரன். நெஞ்சம் பிளந்தோர் நெட்டுயிர்ப்பெடுத்து, “ஐயோ மைந்தா—உன் தந்தையடா-” என்று கதறுமுன் கடுந்துயர்புகுந்தவன்தொண்டையை யடைத்தது. கண்களை இருட்படலம் படர்ந்துமூடத் தலைசுழன்று தரையிற் சாய்ந்தான். மதிபாலன், அவன் விழுந்த இடத்திற்கு நகர்ந்துசென்று அவன் கழுத்தினைத் தன் கரத்தினுல் சூழ்ந்தணைத்து, தடுமாறுந் தன் அருமை விரல்களால் அவன் முகத்தினைத் தைவந்து நெற்றியில் முத்தமிடவும், உருத்திரசூரன் உயிர்ப்புவீங்கித் திறந்த கண்கள் அச்சத்தால் அகன்றுருண்டு விழித்தன. தன்னிரு கைகளாலும் மண்ணினை வாரித் தன் தலையிலும் முகத்திலும் போட்டுக்கொண்டான். அடக்கவொண்ணுக் கடுந்துயர் அவன் மார்பினைக் குலுக்கியது. இனித் தரித்திருக்கமாட்டாத அவனுயிர் முட்டிய வலியினுக்காற்றுமல் அதற்கோர் வழிசெய்து அனுப்ப நினைத்த கைகள் வாளினைப் பற்றின. இதனை யுணர்ந்த மதிபாலன் அக்கைகளைப்பற்றிக்கொண்டு, மெல்லியகுரலாற் பேசுவானிவை இயம்பலுற்றான்:—

“எந்தாய், வேண்டா! யான் பிறந்தநாள் பொறித்துவைத்த ஒரு முடிவையே இன்றுவந்தெய்துகின்றேன். நீயோ, தன் கருமத்தை நடத்திக்கொளளுமவ் விதிக்கு ஓராதுதவுங் கரங்களே ஆகின்றாய். உன்னையான் முதலில் கண்ணுற்றபோதே நீதானவனென என் இதயம் கதறியது. உன்னிதயமும் அவ்வாறே உரைத்ததென்பதையும் யானறிவேன்; எனினும், உணர்வுறத் தூண்டும் நம்மிதயத்தின் ஊக்கங்களை விதியோ வலியதன் இருப்புக்கால்களால் மிதித்துச் சிதைத்துவிட்டது. இச்சமரிலே நம்மிருவரையும் மலையவைத்ததும் விதியே; சேர்த்தென்னைக் கொண்டுபோய்த் தந்தை கைவேலின்மேல் உருட்டித் தள்ளியதும் அவ்விதியே... இதுபற்றி இனியொன்றும் நாம் பேசவேண்டா. என்னருந் தந்தையைக் காண்கின்றேன். கண்டுகொண்டேன் என்னுமக்கருத்தையான் உணர்வுமுற்றத் துய்ப்பதற்கே நேரம் வேண்டும். எந்தாய் என்னருகு வா;

வந்து என் தலையினை உன் கரங்களாலெடுத்து, என் முகத்தினை உன் கண்ணீராற் கழுவிக் கன்னத்தைமுத்தமிட்டு, “என் மைந்தா” என்றென்னை ஒரு முறை அழைத்திடுவாய்.....விரைக, விரைக; நொடிக்கணக்கில் அளந்து தீர்க்கும் உயிரினேன் யான். விரைக—மின்னலென இக்களத்திற்கு வந்த யான் காற்றெனக் கழிந்துபோகின்றேன். என் செய. இப்படித்தானுக வேண்டுமென்று முன்னரே விரிவாக எழுதிவைத்திருக்கின்றது.”

ஐயகோ வென்றலறினன் உருத்திரசூரன். கண்ணெலாம் செந்நீராய்க் கரைந்துக அழுது வாய்விட்டரற்றித் தன் புதல்வன் கழுத்தினைத் தழுவியெடுத்து முத்தமிட்டான். முத்தமிட்டு, “இந்நதியின் வெள்ளமெல்லாம் பாழுமென் தலைமீது பாய்ந்ததானுடாதோ” என நினைத்து, ‘வருவோர் வருக, செல்வோர் செல்க, என்றும் யான் ஓடுமாறு ஓடுகின்றேன்’ என்பதுபோல் பெருகுமவ் வாற்றினை உற்றுநோக்குதலும், தந்தையின் கருத்துணர்ந்த அத் தநயன்,

“எந்தாய் இதனை நீ விழையேல். நீ வாழவேண்டும். பெயர்மழுங்கி மாய்வதற்கே பிறந்தார் சிலராக, அரிய பெரிய கருமங்களாற்றிப் பிழைத்திருப்பதற்குப் பிறக்கின்றார் சிலர். இளமையில் இறக்கும் நான் இயற்றாதுவிட்டதெல்லாம் நீ யியற்றி மறுமுறை இம்முதுமையில் புதியதோர் பெருமையும் புகழும் எய்துவாயாக. என்னுடைய தந்தை யல்லையோ நீ; என் தந்தைதான் பெற்றபேறு அடியனேன் பெற்றதன்றோ! எந்தாய், ஐயனே, இன்றே என்வெற்றுடம்பை எடுத்தேகிப் பெரும்பேதை என்னொரு அன்னையின்முன் வைத்து, நீயும் அவளும் நம் முறவினரும் உடன்கூடித் துயர் மிகப் பாராட்டியபின், புதைத்தவிடந்தனில் விசும்பளாவிய சிகரமோடொரு பெருங்கோட்ட மென்னினைவினை நிலைநிறுத்துமாறெழுப்புவாய். அதனைக் காண்போரெல்லாம், “மாபெருந்தந்தை அறியாது கொல்ல, பெருந்திறல் உருத்திரசூரன்மகன் மதிபாலன் இங்குப் புதையுண்டு கிடக்கின்றான்” என நினைப்பாராகி, இறந்துபட்ட யான் மறந்துபடாதவனுதல்வேண்டும்” எனக் குறைநயந்தனன். இதுகேட்ட உருத்திரசூரன் அவலக் குரலொடு அழிந்து கூறுவான்:—

“அஞ்சேல், நீஇன்று இயம்பியபடியே, என் மகனே மதிபாலா, இயற்றுகின்றேன். என் படைக்கலங்களைக் குவித்தடுக்கிக் கொளுத்திவிட்டு, இப் படையையுந் துறந்து, உன்னை ஏந்திப்போய் உன் அன்னையை அடைந்து, மலர்ப்பள்ளியில் வளர்த்திச் சுற்றமோடு இரண்டிருந்து துயர்கூருவேன். உன்பெயர் மாயாது நிலைநிற்கக் கோட்டமும் கொற்றத் தம்பமும் நெடிதெழுப்புவேன்: இறந்தாயேனும் மனிதருன்னை ஊழிஊழி மறக்கமாட்டார். ஐயகோ, என்செல்வ, ஏதடா இயம்புகின்றேன். உன்னை மணஞ்செய்து காணுமற் பிணஞ்செய்து காணவோ, என் கைகள் புகுந்தன. போர்த்தொழிலே புரிந்துவாழ்ந்த இக் கொடும்பாவிக் கைகளுக்குப் பாழேயன்றிப் பிறிதொன்று வாய்க்குமோ! என்னுலே முன்னுளில் கொலையுண்ட பேர்களெல்லாம் பின்னேயோர் உயிர்பெற்று எழுந்திருப்பாராகாரோ. தத்தம் நாட்களில் தனிப்பெரும் வெற்றியால் விளங்கிய வீரர்களையெல்லாம் வீழ்த்தியே ஈட்டிய என் புகழெல்லாம் பாழ்த்துப்போக அன்னவரனைவரும் ஆருயிர் பெற்றின்று இவ்வயின் எய்துக. பேரும் புகழு மற்றவோர் ஏழைப்படைஞனேயாய் நான் இருப்பேனேல், மகனே மகனே, நீயின்று மாண்டிருக்கமாட்டாயே. அல்லது, என்னுல் நீயன்றி, இன்வாள் ஓராது போழ்ந்து வீழ்த்த நானேதான் இச்செந்நீர்நிலத்தில் கிடக்கலாகாதோ. உன்னை நான் உடலமாய்க் கொண்டுபோவதன்றி என்னையன்றோ நீ கொண்டுபோய் அன்னைமுன் வைத்து அழுதல்வேண்டும். என் இளமையெல்லாம் சோரியும் போருமாய்க் கழிந்தது; முதுமையிலும் செஞ்சோரியும் வெம்போருமே நிறைந்தன. இனி இந்த இரத்தவெறி வாழ்க்கைக்கு முடிவுதான் இதன்மே லுண்டோ!

என்றனன் உருத்திரசூரன். கேட்ட மதிபாலன் கைகள் பிசைந்து, வெந்திறலோய், “உண்மையேயிது; உதிரப்பெருக்கிலே உன் வாழ்க்கையை ஓட்டினுய். ஆயினும், உனக்கும் ஓர் அமைதிநாள் வந்தெய்தும்... பெரியோரென்ன சிறியோரென்ன, முதியோரென்ன இளையோரென்ன, புரவலன் என்ன இரவலன் என்ன, வேற்றுமையின்றி அனைத்துயிருஞ் சென்றொடுங்கு மம் மரணப்பெருங்கடலில் ஐயனே, நீயும் ஒருநாள் அமைதி எய்துவாய்” என்றுகூறும் மதிபாலன்வதனத்தைப் பரிந்துநோக்கி, “மைந்தா, அவ்வரியநாள் அண்மியதாகுக, அப் பெரியகடலும் ஆழமாகுக. விதியின் விருப்பம் இதுவாயின் அதுகாறும் யான் தள்ளருமிப் பெருந்துயரைத் தாங்கியிருப்பேன்” எனக் கையற வெய்திக் கலுழ்ந்தனன் அக் கடுந்திறலோன்.

அவன்முகம் இனிது நோக்கி முறுவலித்த மதிபாலன், தைத்திருக்கும் வேலினைப் பறித்தெடுத்துப் புண்ணுற்ற பெருவலியைத் தளர்த்திக்கொண்டனன். பெருகிய இரத்தத்தோடவனுயிரும் பாய்ந்தது. மைந்தனிரன்ன அவன் மேனிமீது செவ்வருவி புரண்டோடச் சாயுங்காலச் சூரியன்போல் கிடந்தனன். செருகுங் கண்களை மெல்லத் திறந்து நைந்த தன் பார்வையைத்தன் தந்தையின் முகத்தில் நயந்துநாட்டி ஏதோ இயம்பவருவான்போல் முயலுமளவில், இளமையும் வளமும் இவ்வுலக இன்பமும் அரிதின்நீத்து அவனுருயிர் அகன்றது.

இனி என். இப்படியே மதிபாலன் அம்மணற்றரையில் மாண்டுகிடந்தான். முகத்தினைத்தன் கைகளுள் புதைத்து ஆவியற்ற அம்மகனருகே உட்கார்ந்திருந்த உருத்திரசூரன் உணர்வழிந்து வெட்டிவீழ்த்திய நெடுமரம்போல் அவனயல் சாய்ந்தனன். மதிபாலன் வல்வினையும், கன்றிற்கிரங்கும் களிறன்னுன் கதியும், இவ்வண்ணம் இருந்தவாறே.

முற்றிற்று.

சிதம்பரதேவர் சரிதம்.

[710-வது பக்கத் தொடர்ச்சி]

8. மஹா சிவராத்ரி

மாசிமாதத்தில் மஹாசிவராத்திரிசோமவாரம்வரவே, தன்னுடைய பத்தினிமார்களுடன் புத்திரபாக்யத்திற்காக விரதங்கள் பூண்டிருந்த குலசேகரப்பெருமான், அன்று ஆகாரமின்றிப் பகல்முழுதும் சங்கரனைத் தியானஞ் செய்துகொண்டிருந்து, பின் இரவில் ஸ்நானம் முடித்து, விபூதி உருத்திராட்ச மாலிகாபாரணனாய்த் தன் தேவியர்களிருவரும் தொடர்ந்துடன் வரவழக்கப்படி விச்வநாதர் சந்நிதிமுன்னர்ச் சென்று அன்றிரவு முழுவதும் ஸ்வாமியைத் தரிசித்து நித்திரையின்றிப் பஜிக்கக்கருதிக் கோவிலை வலம்வந்துகொண்டிருந்தான். நான்காவது சாமத்தில் தீபாராதனைத் தருணத்தில் பராபரக்கடவுளைப் பற்பல பாக்களால் துதித்துதவனுய்த்தரிசனஞ்செய்து பிரதக்ஷிணம் வரும்பொழுது சந்நிதிக்குத் தென்புறத்தில் அடர்ந்து வளர்ந்து நின்று, பிரதக்ஷிணஞ் செய்பவர்களுக்குப் பகலில் நிழலையும் இராக்காலத்தில் குளிர்ந்த தென்றலையுந் தரும் ஓர் ஆலவிருக்ஷத்தின் கீழ் அடியார்க்கடியராகிய சாம்பசிவமூர்த்தி ஒரு விருத்தாப்பிய சந்யாசியைப்போல் ஜடாமகுட தாரியாய் விபூதி ருத்ராக்ஷதாரணராய் யானைத்தோல் போர்த்துப் புலித்தோலரைக்கசைத்து மான்தோல் ஆசனத்தில் வீற்றிருக்க, பக்கத்தில் பூதகணங்கள், தான் கொண்ட கோலத்திற்கேற்ப, சிஷ்யர்கள் உருவெடுத்துத் தனக்குத் தொண்டுசெய்யவும், அவர்களிற் சிலர் சந்தேக நிவர்த்தி செய்துகொள்ளவும் குருவாயிருக்கும் உருத்திர மூர்த்தியை வினவிக்கொண்டும், மிகவும் பக்தி சிரத்தையுடன் அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டுமிருந்தனர்.

அரசன் நெருங்கி ஆலமரத்தின்கீழ் வீற்றிருக்கும் திருக்கூட்டத்தினைக்கண்டு தன்பத்தினிகளுடன் அஷ்டாங்க பஞ்சாங்கமாகப் பலமுறை தொழுதெழுந்து புளகாங்கிதனாய் ஆனந்தக்கண்ணீர் நதிபோலொழுகக் கரைந்து மனமுருகி மரம்போல் அசைவற்றுக் கை கட்டி வாய்புதைத்துத் திறந்தகண் மூடாமல் பேச நாவெழாமல் மௌனமாய் நின்றான்.

கடவுள், அரசனது பக்தியையும் வைராக்கியத்தையும் தவத்தையும் மிகஉவந்து கடாக்ஷித்து, "அரசனே, உனக்கு வேண்டுவது யாது?" என்று வினவ, அரசன் திடுக்கிட்டு நாவை ஒருவாறு வசப்படுத்தி, "ஓ மகாத்மாவே, அடியேன் அபயம் அபயம். அடிமைக்கு ஓர் ஆண்குழந்தை வேண்டும்," எனக் கழறினான். இதைக் கேட்டு, "உனக்கு மூடனாய்த் தீர்க்காயுளுடைய ஓர் புத்திரனோ, அல்லது அற்ப ஆயுளுள்ள ஞானவானோ வேண்டுவது," என்றார். அரசன் வெருண்டு, "ஒரு நாளிருந்தாலும் குற்றமற்ற ஞானியான குழந்தை போதும்" எனப் பத்தினிகள் இருவரும் ஸ்வாமியின் பாதத்தில் வீழ்ந்து, "எங்கள் குலதெய்வமே ஞானியும் தீர்க்காயுளுமுடைய ஓர் சிசு வுண்டாக அனுக்கிரகிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். சந்யாசி, "உனக்கு ஞானவானான ஓர் புத்திரனைக் கடவுள் சீக்கிரத்திற் கிருபைசெய்வார். ஆனால் அவனுக்கு இருபத்திரண்டாவது வயதிற் சத்துருவால் மரணம் நேரிடும். அப்போது யாரேனும் ஓர் ஜீவன்முக்தன் காப்பாற்றினால் நெடுநாள் ஜீவித்திருப்பான்," என்றுரைத்துச் சிஷ்யர்களுடன் வேதாந்த பாராயணஞ் செய்யத் தொடங்கினார்.

அதைக்கேட்டு அரசனும் பத்தினிகளும் சாஷ்டாங்கமாகப் பணிந்து எழுந்து ஸ்துதித்து வேண்ட, முனிவர் தங்களைப் பார்க்காதது கண்டு, கடவுளைத் துதித்துப் பாடிக்கொண்டு, சன்னிதானஞ் சென்று நமஸ்கரித்து மறுபடியும் சந்யாசியிருக்குமிடத்திற்கு அவசரமாய் வர, அங்குச் சந்யாசியும் திருக்கூட்டத்தவர்களும் இல்லாதிருக்கக்கண்டு அலறி "மோசம் போனோமே" என்று பலவாறுபிதற்றி, 'ஓ தெய்வமே, சாம்பமூர்த்தியே, இந்தச் சந்யாசி உருவமாய்த் தரிசனந் தந்தார், வரந்தந்தார், கிருபை புரிந்தார்" என்று பலவாறு துதித்துச் சந்நிதானஞ்சென்று பரவசமாய்ப் பூமியில் விழுந்தான். பத்தினிகளுபசரணை செய்தனர். இதற்குள் சூர்யோதயமாய்விட்டது. அரசன் மூர்ச்சைதெளிந்து எழுந்து கடவுளாகிய சந்நியாசியை எங்குந் தேடிப்பார்த்துக் காணாமல் தியங்கி, "கடவுள் தரிசனந்தந்து தன்குறையைத் தீர்த்திருக்க வருந்துவானேன்" என்று தனக்குள்தானே தேற்றிக்கொண்டு நதியிலிறங்கி நித்தியகடனை முடித்துச் சன்னிதிக்கு வந்தான். அந்த வேளையில் அர்ச்சகன்பிரசாதமெடுத்து வந்து அரசனுக் களிக்க, அதைப் பெற்றுக் கண்களிலும் தலையிலும் ஒத்தித்தொழுது அருந்தி, "ஓ பக்தவத்ஸலா, பரந்தாமா, பார்வதி சமேதா, கைலாஸவாசா, கறைக்கண்டா, அரவாபரணா, நாங்கள் இன்றோடு விரதத்தைப் பூர்த்திசெய்துகொண்டோம். உனது எண்ணற்கரிய தரிசனம் அகப்பட்ட எங்களுக்கு இனியென்ன குறை? எல்லாமுனது திருவிளையாட்டன்றோ?" என்று பாடித்துதித்துப் பத்தினிகளுடன் அரண்மனை சென்று சபையையணுகித் தன் மந்திரிகளுக்கும் சபையோர்களுக்கும் தனக்கு ஸ்வாமி தரிசனந் தந்த விந்தையைச் சொல்லி மனங்களித்து வாழ்ந்திருந்தான்.

* * *

பரமார்த்தகேசரி:—"தம்பீ, சிவராத்திரிப்பொழுது நமக்கெப்படிப் போவது? அரசன் மனைவிகளுடன் இன்றிரவு ஆலயத்திற்றானே இருப்பார்போல் தோன்றுகின்றது. காவற்காரர்களிற் பெரும்பாலார் அரசனுடனிருப்பார்களாகையால் இதுதான் நமக்கு வாய்த்த சமையம். இராஜபுத்திரிகளை இன்று எப்படியும் பார்த்து வரவேண்டும். நமது விசாரணையில் இராஜகுமாரிகள் நித்தியம் சாயங்காலத்தில் விச்வநாதர் தரிசனத்திற்கு வருவதாகத் தெரிந்துகொண்டோமே! நாம் இவ்விடம் இரண்டுவாரமாய் ஒவ்வொருநாளும் கோவிலுக்குச் சென்று காத்திருந்து அரசனையும் பத்தினிகளையும் பார்த்தோமே தவிர இராஜபுத்திரிகளைக் காணவில்லையே. இனி யிப்படி யிருக்கலாகாது. நாம் நமது பராக்ரமத்தைச் சற்று வெளியிடுவோம். ஒருவேளை இராஜசேவகர்களேனுந் தூதுவரேனும் நமது செய்கைகளில் திருஷ்டிவைத்திருப்பினு மிருக்கலாம். ஆகையால் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். திருடர்கள்கைக்கொள்ளும்ஆயுதங்கள் கபாடக்கோல் தாம்புக் கயிறு, நித்திரைச்சஞ்சீவி, முதலியவைகளை எடுத்துக்கொண்டு நீ தக்ஷிணபாரிசமாய்ப்போய் நந்தவனத்தின் கீழ்ப்பாரிசத்தி லிரு. நான் உத்திரதிசையாய்ப் போய் உன்னைச் சந்திக்கின்றேன்" என்று இருவரும் திருடர்கள் வேடம்பூண்டு ஒருவரை யொருவர் தொடராமற் பிரிந்து மாறுபாடாய்ப்போகவே, இவர்களைக்காத்திருந்த சேவகன், இருவரையும் ஒரே காலத்தில் தொடர முடியாமல், "மோசம் போனோமே, ஒருவனைத்தொடர்வதைவிட நமது தலைவனை எச்சரிக்கை பண்ணுவது உத்தமம்;" என்று தன் தலைவனைத் தேடிச்சென்றான்.

இதற்குள் இரு சகோதரரும் சந்தித்து நந்தனவனத்தின் வழியே சென்று இராஜகுமாரத்திகள் இருக்கும் அரண்மனைக்கு வெளியே நின்று கபாடத்தைத் திறக்க எத்தனிக்காது உப்பரிகைக்கு நேராக இருக்கும் சாளரத்தின்கம்பிகளில் கயிற்றைக் கொக்கியாகக் கட்டி எறிந்து மாட்டி அக்கயிற்றின் வழியாய் உள்ளே குதித்துப் பள்ளியறையைத் தேடுகையில் சேவகர்கள் நித்திரைசெய்வதைச் சுவாசத்தாலறிந்து, நித்திரைசஞ்சீவியை அவர்கள் ஒவ்வொருவர் மூக்குக்கும் நேராகப்பிடித்து மூர்ச்சையடையச் செய்து பள்ளியறையின் கபாடத் தெதிரில் சயனித்திருக்கும் தாதிகளையும் மூர்ச்சைபடையச்செய்து கபாடத்தை மெதுவாகத் திறந்து அரவமின்றி உள்ளே நுழைய, அவ்விடஞ் சயனித்திருக்கும் மரகதமெனுந் தாதியின்மேல் இவர்கள் கால் தடைபடக் குறிப்பாய்ப் பார்த்துத் தாதியென்று தெரிந்து நித்திரைச்சஞ்சீவியை முகரச்செய்து இராஜகுமாரிகள் படுத்திருக்குமிடம் தெரியாமல் திகைத்துத் தங்களிடம் இருக்கும் நுட்ப தீபத்தின் பிரகாசத்தை ஒவ்வோரிடத்தும் காண்பித்துப் பஞ்சணையினருகிற் சென்று கபாடக்கோலின் வழியாய் நித்திரைச் சஞ்சீவியை முகரச்செய்து மூர்ச்சிப்பித்து அப்பெண்மணிகளின் உருவங்களைக் கவனிக்கலாயினர்.

"ஆஹா, மிகவும் ஆச்சரியம்! அரம்பை ஊர்வசி போன்ற தெய்வகன்னிகைகளை ஒப்பார்கள். முப்பத்திரண்டு இலக்ஷணங்களு மமைந்திருக்கின்றன. இவர்களிருவரும் இணைபிரியாமல் ஒரே பஞ்சணையில் சயனித்திருப்பதுவே இவர்களொற்றுமைக்குச் சாக்ஷியாம். கடவுள் எங்களிருவருக்கென்றே இவர்களைப் படைத்திருக்கின்றார்போற் காண்கின்றது. இவர்கள் வாய்க்காவிடில் விவாகமின்றி வாழ்வதே சுகம். இவர்களைத் துயிலுணர்த்திப் பேசுவோமென்றால் நாம் இன்னாரென் றறியாததால் கலகம் நேரிடலாம். நாமுங் காலதாமதஞ் செய்யாது அகலவேண்டும். தங்கை தமக்கை இன்னாரென்று தெரியாததால் ஸ்பரிசிக்கவும் தகாது" என்று பலவாறெண்ணி அவர்கள் முகவிலாசத்தையும் சௌந்தரிய ரூபத்தையும் கண்ணார உட்கொண்டு திரும்பிப் பலகணி வழியாகக் கீழேயிறங்க எத்தனித்தபோது மனிதசஞ்சார அரவமும் இரகசியக் குரல்களுங்கேட்டுக் காவலாளிகள் தங்கள் செய்கைகளைக் கவனித்து ஜாக்கிரதையாய்விட்டார்களென்றுணர்ந்து அம்மார்க்கத்தை விட்டுப் படிவாயிலின் வழி சென்று பூனையைப்போற் குதித்து வெளிவரப் பதின்மர் சேவகர்கள் எதிர்க்க அவர்களைப் பறக்கடித்து மறைந்துபோயினர்.

அடிபட்ட சேவகர்கள், "திருடர்கள்! திருடர்கள்! ஓடுங்கள்! பிடியுங்கள்!" என்றிரைச்சலிட்ட விக்ரமசேனன் யாவும் கண்டு களித்துத் தான் மறைந்திருந்த விடத்திற்குச் சேவகத்தலைவனைச் சைகையாலழைத்து, "இனி உங்களாலாவதொன்று மில்லை, சந்தடியின்றி அரண்மனைவிட்டுப் போங்கள்" என்றான். சேவகத்தலைவன் வெட்கித் தன் சேவகக்கூட்டத்தை அழைத்துச் சென்றான். மறுநாளுதயத்தில் தாதிகளும் காவலர்களும் ஒவ்வொருவராய் நித்திரை நீங்கி நடந்த விஷயத்தைக்கேட்டுத் தியங்கினார்கள். அரசிளங் குமரிகள் நித்திரைநீத்து வியப்புற்றுப் பரிசோதிக்க ஜன்னலில் கொக்கிமாட்டி ஓர் கயிறு பூமிவரையில் தொங்கிக் கிடப்பதைக்கண்டு தலைவாயிலில் இரைச்சலையுங்கேட்டு ஏதோ திருட்டுச்செய்தி நடந்திருக்கின்றதென்று இராஜனுக்குத் தெரிவிக்க, அரசன்சினந்து "நமது இராஜ்யத்தில் திருடு நடக்கும்படியாது குறைவு நேரிட்டதோ" வென்று வருந்தினான். மந்திரி மகிழ்ந்து ஏழைகளுக்குப் போதுமளவும் திரவியமளிக்கச்செய்து, திருடரைப் பிடிக்குமளவும் சேவகத்தலைவனுக்குப் பொன்கொடுப்ப தில்லையென்று உத்திரவளித்தனன். அரசன் தனக்குச் சுவாமி தரிசனந் தந்ததையே புகழ்ந்து கடவுள்பால் அன்புசெலுத்தி ஆனந்தமடைந்திருந்தான்.

---

9. சந்யாசி.

அரசன் மந்திரியுடன் அரண்மனை மண்டபத்திலிருக்கும்போது ஒரு சேவகன் "மஹாராஜாவே, யாரோ ஒரு சந்யாசி வந்திருக்கிறார்' என்றான். சந்யாசியென்றவுடன் அரசன் திடீரென்றெழுந்து அவரைப் பார்க்கச் செல்லவே சந்யாசியின் சீடன், "அரசே! எனது குரு நிஷ்டைசெய்வதற்கு ஓர் குளிர்ந்த விடம் காட்டுவீராகில் ஆசிரம மொன்றியற்றிச் சிலநாளிருக்கலாம்" என்று கூறினான். அரசன்வணங்கி மந்திரியை நோக்க அவனும் சந்தனச்சோலையில் ஆசிரமமொன் றமைக்கச்செய்து சீடனுடன் சந்யாசியை அங்கமர்த்தி நிஷ்டைபுரியச் செய்தனன். ஒருநாள் "ஓ வேந்தே நந்தவனத்திலிருக்கும் சந்யாசியும் சீடனும் மிகுந்த நற்குணமுடையவர்போற் காணப்படுகின்றனர். தபோதனர்களுமா யிருக்கின்றார். இவர்தாம் அநேக தேசங்கள் திரிந்து வருபவர்களாகையால் தேவரீர் இளங்குமரிகளுக்கு இவர்களால் மணவாளர்களைத் தேட முயற்சி செய்யலாம். ஆகையால் இவர்களுக்குப் பணிவிடை செய்யத் தங்கள் பெண்மணிகளை ஏற்படுத்துவது மிகுந்த நன்மையைத் தரும்" என்று மந்திரி கூறினான். அக்கருத்துக்கிணங்கி அரசன் தன் மனைவியர்களிடஞ் சொல்ல அவர்களும் மகிழ்ந்து குமாரத்திகளை வரவழைத்து, "நமது நந்தனவனத்தில் நிஷ்டையிலிருக்கும் தபோதனர்களுக்குப் பணிவிடைசெய்து அனுக்ரகம் பெறவேண்டும் கண்மணிகளா" வென்றார்கள். அவர்கள் மகிழ்ச்சியுடன் தபோதனர்க ளிருக்குமிடமணுகி அவர்களை வணங்கித் தாங்கள் வந்த விஷயத்தைத் தாதிகளால் தெரிவித்தார்கள். தபோதனர்கள் களிப்புற்று ஆசிகூறிப் பணிவிடை செய்யப்பெற்றுச் சமயம் பார்த்திருந்தனர். சிலநாட் சென்றவுடன் சந்யாசி இராஜகுமாரிகளின் பணிவிடைக்குமெச்சினவன் போற் பாவித்து அருகழைத்து, "கன்னிகாள், உங்கள் கோரிக்கையாது? சந்யாசம் பெறவோ அல்லது தக்க இராஜகுமாரர்களை மணந்து இராஜ்யம் ஆளவோ?" என இராஜகுமாரிகள் வெட்கித்தலைகுனிந்துகண்ணீர்

188935

பாயத் தூக்கித்தனர். அவர்கள் துயரமகற்ற வாக்களித்து வினவக் காந்திமதி வணங்கி "ஐயனே, நாங்களிருவரும் ஒருவர்க் கொருவர் இணைபிரியாவாழ்க்கையுடையோம். ஏதோசில கலைகளைக் கற்றுளோம். மங்கைப் பருவமடைந்து நாலைந்து வருடங்களாயின. இதுவரையி லறியாத மணக்காதல் இரண்டொரு மாதங்களாய் வருத்துகின்றது. ஆனல் எங்களைப்போல் இணைபிரியா இரண்டு அரச சகோதரர்கள் வாய்த்தாலன்றி மணமுடியாதாகையால் "கிட்டாதாயின் வெட்டென மற" என்பதுபோல் எண்ணிவருந்தி நாள்கழிக்கையில், ஸ்வாமிகளுக்குப் பணிவிடை செய்யும் பாக்கியம் வாய்த்தது" என்றுகூறிக் கண்ணீர் உதிர்த்தனர். சந்யாசி மகிழ்வுற்று "ஓ பெண்கள்நாயகங்களா! அஞ்சாதீர்கள். நீங்கள் இவ்வளவு வருத்தத்தோடு யாம்களிக்கப் பணிவிடைசெய்தும் உங்கள் குறை தீராதிருக்கலாமோ. யாமறிந்த ஓர் அரசனுக்கு உங்களைப்போல் இணைபிரியா இரண்டு குமாரர்களிருக்கிறார்கள். அவர்களே தக்க மணாளர்கள். ஆகையால் இனிக் காலதாமதமின்றி அங்குச்செல்வோம். நீங்களரண்மனை யேகுவீராக." என்றுரைத்து இருவரும் அதிவேகமாய்ச் சென்றனர். இச்செய்திகளை எல்லாந்தன் மனைவிகளால் தெரிந்துகொண்ட அரசன் மந்திரியின் நன்மதியை வியந்து களிப்படைந்தான். மந்திரியோ நந்தவனச் சங்கதிகள்யாவும் அன்றன்றுணர்ந்தும் அறியாதவன் போல் மௌனமாயிருந்தான்.

இப்பால், குடிகள் "கூ" வென்றிரைச்சல் செய்து கும்பல் கும்பல்களாய் வந்து அரசன்முன் தோன்றி, வனவிலங்குகள் மிகத்திரண்டு பயிர் முதலியவற்றைப் பாழ்செய்து தோட்டங்களையழித்துக் குடிகளில் சிலரை வதைத்தனவென்று முறையிட, அரசன் வேட்டைக்கு ஆயத்தம்செய்யக் கட்டளையிட்டுக் குடிகளின் நஷ்டம் தீரத் திரவியமளித்து வேட்டைக்குப்பிரயாணமானன்.

இராஜகுமாரர்கள் தங்கள் பட்டணஞ் செல்லப் பிரயாணப்பட்டவர்கள். அரசனும் பரிவாரங்களும் வேட்டைக்குச் செல்வதால் அவர் புதல்விகளைக் கண்டு தங்கள் விர்த்தாந்தத்தைத்தெரிவித்து வசனிக்கத்தக்க சமயம் வாய்க்குமென வெண்ணிப் பிரயாணத்தை நிறுத்தி அரண்மனை வாயிலண்டை இரவில்சென்று மறைந்திருந்தனர். பாராக்ரமசேகரன் மனவருத்தமாய்ச் சபையை விட்டகன்று தனதில்லில் குமாரர்களை யழைப்பித்து, "அரசன் புதல்வ வரம் பெற்றதுமன்றிக் குமாரத்திகளுக்கு விவாக முயற்சியும்செய்துவருவதால் நமதிஷ்டம் நிறைவேறுவ தெங்ஙனம்" என்று வினவ, கோமளாங்கன், "தந்தையே, வனத்தில் வேட்டையாடும்போது அரசனைத் தனியாகப் பிரித்துச்சென்று மிருகங்களாலோ நமது ஆயுதத்தாலோ எமலோக மனுப்பிவிடின் யாவும் அடையலாம். நாமிருக்க அரசனுக்குத் துணையாயிருப்பவர் யாவர்? தமயன் இங்கேயேயிருந்து அரச னிறந்தானென்பதைக் கேட்டவுடன் மஹாதேவரைச் சிறையிலடைத்துப் பொக்கிஷத்தைக் கைப்பற்றலாம். சைன்யத்தையும் வசப்படுத்தலாம். நாமும் வந்து அரசை யேற்றுக்கொள்ளலாம். பறையோசை கேட்டதுமுதல் இதுவே என் மனதிலுதிப்பது" என்றான்.

சோமபாலன்:—தம்பி சொல்வது நல்ல யுக்திதான். ஆனல் யாவருங் கலந்து வேட்டையாடுகையில் அரசனைத் தனிப்படுத்துவது மிகவும் அருமை. விக்ரமசேனன் அரசனைத் தொடர்ந்தே செல்வான். அன்றியும் சைன்யத்தில் பாதியும் மந்திரிகளிற் சிலருமே நமக்கு வசப்பட்டவர்கள். மற்றவர்களெல்லாம் இராஜ விஸ்வாஸிகள். ஆகையால் இராஜ்யம் சுலபமாய் வந்துவிடாது. பெண்களுக்கு மணம் முடியாவிடில் புத்திரனுதித்தாற்றான் என்ன? அச் சிசுவைத் தந்திரமாய் நாசப்படுத்த நம்மா லாகாதா? பிறகு குலசேகரன் நமக்கன்றி யாருக்குத்தான் அரச பட்டத்தை யளிக்கப் போகின்றான்?

பராக்:—சரி அப்படியே செய்வோம். விவாகமில்லாமற் செய்வதெப்படி? அவசரப்படலாகாது, மெல்லத்தின்றால் முள்ளையுந் தின்னலாமன்றோ? சந்யாசி எங்கிருந்து மணவாளரைக் கொணர்வானே? கொணர்ந்தாலுங் கோட்சொல்லி அவர்கள் வேறு பெண்களை மணங்கொள்ளும்படி செய்யலாம். பிறகு இரண்டு இணைபிரியா இராஜ சகோதரர்கள் எங்கே அகப்படுவார்கள்.

கோமளா:—விவாகமில்லாமற் செய்வது என்வேலை. இப்போதும்விவாகமில்லை, இனிமேலும் விவாகமில்லை. நீங்களிருவரும் வேட்டைக்குச் செல்லுங்கள். காரியத்தை நடத்திவிட்டுப் பிறகு தெரிவிக்கின்றேன்.

பாராக்:—அப்படியன்று; நாம் மூவரும் செல்லாது ஒருவன் நின்றுவிடில் விக்ரமசேனன் சந்தேகிப்பன்.

கோமளா:—ஆனல் யானும் வருகின்றேன். பாதிவழி சென்று திரும்பவு மாகாதா? இரகஸியமாகப் பிறகு திரும்பி உங்களைச் சந்திக்கின்றேன்." என்றான். இதற்கிணங்கி இம்மூவரும் வேட்டைக்குப் பிரயாணமாயினர்.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[712-வதுபக்கத் தொடர்ச்சி]

5. மந்திரசாலைச் சருக்கம்

356. வாரணி முரச மார்ப்ப
வயிரொடு வளைக ளேங்கத்
தாரவர் குழாங்க ளீண்டச்
சயமரம் அறைது மேனும்
ஆரவி ராழி யானை
யஞ்சுதும் அறிய லாகா
கார்விரி தடக்கை வேந்தே
கழலவர் கரும மென்றான். 119.

கார் விரி தடக்கை வேந்தே - மேகத்தைப் போலக் கொடைத்தொழில் விரிந்த விசாலமான கைகளை உடைய மன்னவனே, வார் அணி முரசம் ஆர்ப்ப - வார் கட்டிய அழகிய மணமுரசம் முழங்க, வயிரொடு வளைகள் ஏங்க - ஊதுகொம்புகளும் சங்குகளும் ஒலிக்க, தார் அவர் குழாங்கள் ஈண்ட - அரசர் கூட்டம திரண்டு வந்து நெருங்கி இருப்ப, சய மரம்-சுயம்வரமாகிய மணமுறையை நடத்துவதாக, அறைதும் ஏனும் - பறைசாற்றி அறிவித்து நடத்துவோம் என்றாலும், ஆர் அவிர் ஆழியானை அஞ்சுதும் - ஆரக்கால்களோடு விளங்கும் சக்கரத்தைத் தாங்கிய அசுவகண்டனைக் குறித்து அஞ்சுகின்றோம். கழல் அவர் கருமம் அறியல் ஆகா - அரசர்கள் செய்யுங் காரியம் இதுதானென்று துணியற்பாலன அல்ல, என்றான் - என்று சொன்னன்.

---

357. ஒன்றுநாங் கருதிச் சூழின்
ஊழது விளைவு தானே
கன்றிநாங் கருதிற் றன்றி
மற்றொர்வா றாக நண்ணும்
என்றுநாந் துணிந்த செய்கை
இதன்றிறத் தென்ன மாட்டாம்
இன்றுநாந் துணிது மாயின்
இனிச்சிறி துரைப்ப னென்றான். 120.

ஒன்று நாம் கருதி சூழின்-ஒன்றை நினைத்து ஒரு காரியத்தை நாம் செய்யப்புகுவோமாயின், ஊழ் அது விளைவு தானே கன்றி-முன்னை வினையின் பயன் முதிர்ந்து தானகவே எதிர்ந்து வந்து, நாம் கருதிற்று அன்றி-நாம் நினைத்தவாறு அக்காரியம் கைகூடாமல், மற்று ஓர் வாறாக நண்ணும் - வேறொரு விதமாக முடிந்து நிற்கும். என்றும்-ஒருபோதும், நாம் துணிந்த செய்கை இதன் திறத்து என்ன மாட்டாம் - நாம் செய்யத் துணிந்த கருமம் இப்படித்தான் முடியும் என்று நிச்சயமாய் நினைக்க இயலாதவர்களாய் இருக்கின்றோம். (ஆயினும்,) இன்று நாம் துணிதும் ஆயின்- இவ்விஷயத்தை இன்றையதினமே தீர்மானித்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமானல், இனி சிறிது உரைப்பன் என்றான் - இன்னும் ஒரு சிறிய விஷயத்தை நான் எடுத்துச் சொல்வேன் (கேட்டருள்வாயாக) என்று சொல்லலுற்றான்.

---

358. வீழ்புரி விளங்கு நூலோய்
மேலுநங் குலத்து ளார்கட்
கூழ்புரிந் துறுதி கூறும்
உயர்குல மலர நின்றான்
தாழ்புரி தயங்கு நுண்ணூற்
சதவிந்து மொழிந்த வாற்றால்
யாழ்புரி மழலை யாள்கண்
ணுவிதை யறிது மென்றான். 121.

வீழ்புரி விளங்கு நூலோய் - மார்பிலே தொங்கும்படி அணிந்து விளங்கும் முப்புரிநூலைத் தரித்தவனே, மேலும்-முன் பலசமயங்களிலும், நம் குலத்து உள்ளார்கட்கு-நமது குலத்தில் உதித்த மன்னர்களுக்கு, ஊழ் புரிந்து-செய்ய வேண்டிய கருமங்களை முறையாகச் செய்துவைத்து, உறுதி கூறும் - நற்பயனைத் தரத்தக்க நல்ல உபதேசங்களைச் சொல்லி, உயர்குலம் மலர நின்றான்-நமது மேம்பட்ட குலம் மேன்மேலும் வளர்ந்து விளங்குவதற்கு உதவிபுரிந்து வந்தவனாகிய, தாழ்புரி தயங்கு நுண்நூல் -விளக்கமுற்றுத் தொங்கும் முப்புரியாகத் திரித்த நுண்ணிதான பூணூலைத் தரித்த, சதவிந்து மொழிந்த ஆற்றால்- உங்கள் குல புரோகிதனை சதவிந்து என்பவன் சொல்லும் விதம், யாழ்புரி மழலையாள் கண்ணு -யாழும் தான் விரும்பிக்கேட்கும் மழலைச் சொற்களை உடைய நம் மகள் விஷயமாக, இதை அறிதும் என்றான் - நாம் செய்யத்தக்க காரியம் இது என்பதை அறிந்து செய்யக்கடவோம், என்றான்- என்று சொல்லி முடித்தான்.

---

359. என்றவன் மொழிந்த போழ்தின்
ஏனையா ரினிதி னோக்கி
மின்றவழ் விளங்கு வேலோய்
மெய்யினு மேவல் வேண்டும்
சென்றவன் மனையு ணீயே
வினவெனச் சேனை வேந்தன்
நன்றவர் மொழிந்த தெல்லாம்
நல்லவா நயந்து கேட்டான். 122.

என்று அவன் மொழிந்த போழ்தின் - இவ்வாறு அவன் சொல்லி முடித்தபோது, ஏனையார் இனிதின் நோக்கி - மற்றைய மந்திரிகளும். இனிதின் மனமுவந்து மன்னனை நோக்கி, மின் தவழ் விளங்கு வேலோய் - மின்னலின் ஒளி தவழ்ந்தாற்போல விளங்கும் வேலையேந்திய மன்னவா, மெய் இன்னும் மேவல் வேண்டும் - உண்மையை இன்னும் நாம் பொருந்தக் கேட்டு அறியவேண்டும்; அவன் மனையுள் நீயே சென்று வினவு - சதவிந்துவின் வீட்டுக்கு நீயே போய் அவனைக் கேட்பாயாக, என-என்று சொல்ல, சேனை வேந்தன் - சதுரங்கசேனைகளையும் உடைய சலனசடி மன்னன், நன்று அவர் மொழிந்தது எல்லாம் - நன்றாக எடுத்து மந்திரிமார் சொன்னவற்றையெல்லாம், நல்லவா - தக்கபடி, நயந்து கேட்டான் - விருப்பத்தோடு கேட்டான்.

---

360. இந்திர னனைய நீரோய்
இனிப்பிறி தெண்ணல் வேண்டா
மந்திரம் நீளு மாயின்
வருவன அறிய லாகா
சந்திரன் றவழ நீண்ட
தமனியச் சூல நெற்றி
அந்தரந் திவளு ஞாயிற்
கோயில்புக் கருளு கென்றார். 123.

இந்திரன் அனைய நீரோய் - செல்வத்தால் இந்திரனைப்போன்ற தன்மையோய், இனி பிறிது எண்ணல் வேண்டா - இனி வேறொரு ஆலோசனையும் செய்ய வேண்டாம். மந்திரம் நீளும் ஆயின் - ஆலோசனை காலம் நீடிக்குமாயின், வருவன அறியல் ஆகா-இடையிலே என்ன நேருமென்று அறியமுடியாது. (ஆகையால்) சந்திரன் தவழ நீண்ட - சந்திரன் படிந்து செல்லும்படி உயர்ந்ததும், தமனியம் சூலம் நெற்றி - பொற்சூலத்தை ஏந்திய உயர்ந்த முன்பக்கத்தை உடையதுமான, அந்தரம் திவளும் ஞாயில்-ஆகாயத்திலோங்கி விளங்கும் மதிலாற் சூழப்பட்ட, கோயில் புக்கு அருளுக - அரண்மனைக்குள் சென்றருளுவாயாக, என்றார் - என்று சொன்னார்கள்.

நெற்றி-மதிலின் உயர்ந்த முன்பக்கம். ஞாயில்-மதிலின் ஒருறுப்பு; இங்கே ஆகுபெயராய் மதிலையே குறித்து நின்றது. இனி வேறு ஆலோசனை செய்ய வேண்டாம். மந்திராலோசனைச் சபையைக் கலைத்துவிட்டு அரண்மனைக்குச் செல்லலாமென்று மந்திரிகள் அரசனுக்கு அறிவித்தார் என்க.

188935

361\. மந்திரக் கிழவர் தம்மை
மனைபுக விடுத்து மன்னன்
சுந்தரச் சுரும்புந் தேனும்
சூழ்கழ னிரையும் மார்ப்ப
வந்தர மகளிர் போல்வார்
வரன்முறை கவிரி வீச
அந்தரக் கடைக ணீங்கி
அகநகர் அருளிப் புக்கான். 124.

மன்னவன் - அரசன், மந்திரக் கிழவர் தம்மை - மந்திரிமார்களை, மனைபுக விடுத்து - தத்தம் மனைக்குப் போகும்படி விடைகொடுத்து அனுப்பிவிட்டு, சுந்தரம் சுரும்பும் தேனும் - அழகிய வண்டினங்களும், சூழ்கழல் நிரையும் - காலிற்கட்டிய வீரக் கழல்களின் வரிசையும், ஆர்ப்ப - ஒலிக்கும்படி, வந்து-வந்து, அரமகளிர் போல்வார் வரன்முறை கவரிவீச - தெய்வப் பெண்களையொத்த மங்கையர் முறைப்படி இருமருங்கும் கவரிவீசிச் செல்ல, அம் தரம் கடைகள் நீங்கி- அழகிய பல வாயில்களையும் கடந்து, அகநகர் புக்கு அருளினன்-அரண்மனையின் உட்புறத்தைச் சென்று அடைந்தான்.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம் — 6. கங்கைப் படலம்.

[706-வது பக்கத் தொடர்ச்சி.]

கங்கை வேடனும் காளத்தி வேடனும்.

அருந்தவ ருறையு ளெய்திக் கங்கைநீராடி நல்விருந் துண்டு இராமன் இனிதிருந்தனன். மனத்திலோர் குறையுமில்லை, யாரிடத்தும் எவ்வகைப் பகையுமில்லை. அயோத்திமாநகர் மாந்தரையும் அன்னையர் தந்தை அருமைத்தம்பி பரதனோ டவனிளையவன் முதலியோரையும் பிரிந்த பரிவினால் வாட்டஞ் சிறிதெய்தியிருக்கலாமாயினும் அதனை யவன்முகங் காட்டவில்லை.

ஆய காலையி னாயிர மம்பிக்கு
நாய கன்போர்க் குகனெனு நாமத்தான்
தூய கங்கைத் துறைவிடுந் தொன்மையான்
காயும் வில்லினன் கற்றிர டோளினான்.

[அப்போது--ஆயிரம் படகுகளுக்குத் தலைவனும், போர்த்திறல் வாய்ந்த குகனென்னும் பெயரினனும், தூய்மையான கங்கைக்கரையிலே படகுவிடும் பண்டைத் தொழிலுடையவனும், பகைவரைச் சினத்தழிக்கும் வில்லையுடையவனும், மலைபோன்ற திரண்ட தோள்களையுடையவனும்—]

துடிய னாயினன் தோற்செருப் பார்த்தபே
ரடிய னற்செறிந் தன்ன நிறத்தினன்
னெடிய தானை நெருங்கலி னீர்முகி
லடியி னொடெழுந் தாலன்ன வீட்டினான்.

[பறையை யுடையவனும், வேட்டைநாய்களால் தொடரப் பெற்றிருப்பவனும், தோல்செருப்புக் கட்டிய பெரிய கால்களையுடையவனும், இருளே அடர்ந்ததுபோன்ற கரிய நிறத்தையுடையவனும், தனது பெரிய சைனியம் நெருங்கி வருதலால் காளமேகம் அடியோடெருவதுபோன்ற தோற்றமுடையவனும்—]

கொம்பு துந்துபி கொட்டு முறைமையன்
பம்பை பம்பு படையினன் பல்லவத்
தம்ப னம்பிக்கு நாத னழிகவுட்
டும்பி யீட்டம் புரைகிளை சுற்றத்தான்

[கொம்பினால் துந்துமி என்னும் பறையை அடிப்பவனும் பம்பை என்னும் பறையை ஒலித்துக்கொண்டு வருகின்ற படையையுடையவனும், இலைபோன்ற அலகுடைய அம்புகளை உடையவனும், மரக்கலங்களுக்குத் தலைவனும், மதநீர் பெருகும் கன்னமுடைய யானைக்கூட்டம் போன்ற கிளைஞரையும் சுற்றத்தாரையு முடையவனும்—]

காழ மிட்ட குறங்கினன் கங்கையி
னாழ மிட்ட நெடுமையி னானைத்
தாழ விட்டசெந் தோலன் தயங்குறச்
சூழ விட்ட தொடுபுலி வாலினான்.

[சல்லடம் என்னும் ஆடையையணிந்த துடையையுடையவனும், கங்கையின் ஆழத்தை அளந்துகாட்டவல்ல உயரமுடையவனும், இடுப்பிலே தொங்கவிட்ட சிவந்ததோலாடையுடையவனும், விளங்கும்படி தன் இடுப்பில் சுற்றிக் கட்டிக் கொண்டிருக்கின்ற புலிவாலை யுடையவனும்—]

பற்றொடுத் தன்ன பல்சூற் கவடியன்
கற்றொடுத் தன்ன போலுங் கழலினான்
அற்றொடுத் தன்ன குஞ்சிய னாள்கதிர்
நெற்றொ டுத்து நெரிந்த புருவத்தான்

[பல்களைக் கட்டினதுபோன்ற பல பலகறைகளால் தொடுத்த மாலையை அணிந்தவனும், கல்களைப் பிணைத்தது போன்ற கால்களையுடையவனும், (அல்லது, கல்லால்தொடுத்தது போன்ற திண்ணிய வீரக்கழலை அணிந்தவனும்) இருளைத் தொடுத்துக் கட்டியது போன்ற மயிர்முடியில் கதிர் பொருந்திய நெல்லைச் செருகிக்கொண்டு நெரித்திருக்கும் புருவத்தை யுடையனும்—]

பெண்ணை வன்செறும் பிற்பிறங் கிச்செறி
வண்ண வன்மயிர் வார்ந்துயர் முன்கையான்
கண்ண கன்றட மார்பெனுங் கல்லின
னெண்ணெ யுண்ட விருள்புரை மேனியான்

[பனைமரத்தின் வலிய சிறும்புபோலத் தோன்றி யடர்ந்த நேர்மையான திண்ணிய மயிர் வரிசையாய் வளர்ந்து உயர்ந்திருக்கின்ற முன்கையை யுடையவனும், விசாலமான பெரிய மார்பென்னும் மலையையுடையவனும், எண்ணெய் பூசிய இருள்போன்ற உடம்பை உடையவனும்—]

கச்சொ டார்த்த கறைக்கதிர் வாளின
னச்ச ராவு நடுக்குறு நோக்கினான்
பிச்ச ராமன்ன பேச்சின னிந்திரன்
வச்சி ராயுதம் போலு மருங்கினான்.

[அரைக்கச்சில் கட்டிய இரத்தக்கறையோடு ஒளிவீசுகின்ற வாளையுடையவனும், விஷப்பாம்பும் பயப்படும்படியான பார்வையுடையவனும், பித்தரைப்போன்று பேசுபவனும், இந்திரனது வச்சிராயுதம் போன்ற வலிய இடுப்பை உடையவனும்—]

ஊற்ற மேமிக வூனொடு மீனுகர்
நாற்ற மேய நகையின் முகத்தினான்
சீற்ற மின்றியுந் தீயெழு நோக்குவான்
கூற்ற மஞ்சக் குமிறுங் குரலினான்.

[தன் வலிமை அதிகமாகும்படி புலாலையும் மீனையும் தின்ற நாற்றம் பொருந்திய பற்களோடு கூடிய முகத்தை யுடையவனும், கோபம்இல்லாதபோதும் தீஎழவிழிப்பவனும் யமனும் அஞ்சும்படி அதிரும் குரலுடையவனும்.]

சிருங்கி பேர மெனத்திரைக் கங்கையின்
மருங்கு தோன்று நகருடை வாழ்க்கையா
னொருங்கு தேனொடு மீனுப காரத்தி
னிருந்த வள்ளலைக் காணவந் தெய்தினான்.

[அலைகளையுடைய கங்கைக்கரையில் உள்ள சிருங்கிபேரம் என்னும் நகரில் வாழ்பவனும், ஆகிய அவன் — அங்கிருந்த இராமனைக் காண, மீனும் தேனும் காணிக்கைகளாகக் கொண்டு தன் சுற்றத்தாரொடு சேர்ந்து வந்தெய்தினான்.]

சிருங்கிபேர வேட்டுவ நாயகன் சித்திரம்து மிகச் சிறந்தது. உருவிலும்உடையிலும் தொழிலிலும் மென்மையென்பது இக் குகன் இருந்ததிசையிலு மிருக்க இயலாது. எண்ணெயுண்ட இருள்போல் கருத்த மேனியன், அதன்மேல் பனைச்சிறும்பென வளர்ந்த மயிரினன், கங்கையின் ஆழத்தைத் தன் கணைக்காலால் காட்டவல்ல உருவினன், கவடிக் கழுத்தினன், கரித்தோலைப் புலிவாலால் அரைக்கிசைத்த உடையினன், புலால்நாற்றமுடைய வாயினன், சீற்றமின்றியுந் தன்கண்கள் தீயுமிழப் பின்தொடரும் நாய்களோடும் வந்து தோன்றுகின்றான். இக் குகப்பெருமானின் ஓர் இளம் பதிப்பெனற் குரிய திண்ணனார்

திங்கள்சேர் சடையார் தம்மைச்
சென்றவர் காணு முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த
அருள்திற நோக்க மெய்தித்
தங்கிய பவத்தின் முன்னைச்
சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய வொளியி னீழற்
பொருவிலன் புருவ மானார்

என்று சேக்கிழார்பெருமான் பாடியவாங்கே நம் கம்பரும் இங்கு,

சுற்ற மப்புற நிற்கச் சுடுகணை
விற்று றந்தரை வீக்கிய வாளொழித்
தற்ற நீத்த மனத்தின னன்பின
னற்ற வப்பள்ளி வாயிலை நண்ணினான்

[உடன்வந்தவர்களைத் தூரத்தில் நிற்கவைத்து, சுடுகின்ற அம்பையும் வில்லையும் விட்டுவிட்டு இடுப்பில் கட்டிய வாளையும் நீக்கிவிட்டு, சோர்வில்லா மனத்தினனாய், மிக்க அன்பினோடும் நல்ல தவசிற்குரிய பர்ணசாலையின் வாயிலை (குகன்) நெருங்கினான்] நெருங்கி,

நின்று நெஞ்சி னிரம்புறு மன்பா
லின்றே நின்பணி செய்திட விறைவா
நன்றே வந்தன னாயடி யேன்யா
னென்றே கூவின னெயினரி னிறையோன்

[நெஞ்சில் நிரம்பிய அன்போடும் நின்று, "இறைவா, நாய்போன்ற அடிமையாகிய நான், இப்பொழுதே உன் ஏவலைச் செய்யும்பொருட்டு நன்றாக வந்திருக்கின்றேன்" என்று அவ் வேட்டுவத் தலைவன் இராமனை நோக்கிக் கூவினான்]

எனச் சாற்றுகின்றார்.

அவ்வுடுப்பூர்வேடனும் இச்சிருங்கிபேர வேடனும் இருவரும் இறைவன் திருமுன்னர் எய்துஞ் செவ்வியில் அளப்பரிய அன்பிற்கு ஆளாயினர். திண்ணனார் தானே அன்புருவமாய்விட்டபடியால்இறைவனுக்குத் தான் அன்புடையரென்பதையும் அறிந்துகொள்ளாமல்வழிபட்டார். குகப்பெயர்க் குரிசிலோ அஃதுணர்வான். உணர்ந்து அன்பு நெறியின் ஆசாரங்களை அனுட்டிக்கலானான். அன்பினால் ஆண்டவற்கு ஆள் செய்யத் தலைப்பட்டோர் தம் சுற்றத்தைச் சற்றே அகல நிற்கவைத்த லவசியம். எதிர்க்கவும் தற்காக்கவும் உதவுகின்ற வில்லினோடு வாளையும் நீத்தல் வேண்டும். அவ் விறைவன்பணியை ஆற்றுவதல்லால்தமக்கு வேறோர்வரமும்விருப்பமும்எள்ளளவும்வேண்டாதவர்களாதல் வேண்டும். "என்னுடைய ஆற்றலால் என்னுடைய கருமங்களை இயற்றிக்கொள்கின்றேன்; ஆயினும், கடவுளே நீ அருகு நின்று எனக்கவ்வப்போது சிற்சில உதவிகள் செய்துகொண்டிரு" என்ற பான்மையில் பூசனைகள் புரிவது கடவுளை ஆட்கொள்வதாகுமே யன்றித் தாம் கடவுளுக்கு ஆளாவதென்பதோ ஒருபோதும் ஆகாது. அதுதான் ஆற்றல்நெறியுமாசைநெறியும் ஆகலாம். மற்றுத்தம்மைஇறைவனுக்கு முறைசெய்யும் அன்புநெறியோ ஆதற்கில்லை. ஆதலால் தன் ஆற்றலின் நினைவையும் அவ்வாற்றலைச் செலுத்துங் கருவிகளையும் அகற்றியே இராமனை அணுகினன் குகன்-தீர்த்தனென்றறிந்தேதோ அவன் தன் சிந்தையும். அவன் வெளித்தோற்றத்தின் வன்மையென்ன; உள்ளன்பின் அழகு தான் என்ன! வெய்ய கன்மார்பினுள் அன்பினால் நையுமிதயங்கள் எத்துணையோ துடிக்கின்றன. இராமன்பால் இவனுக்கின்றுஇவ்வன்பு எழுந்ததெங்ஙனம்? பண்டை நண்பினன் என்று வான்மீகிமுனிவர் இயம்பினாராயினும், கம்பர் அதனை விடுத்து, திண்ணனார்க்கிணங்க இன்றே முதல் முறை இறைவனை இவன் காணவமைக்கின்றார்.

அன்னான் கூவிய குரலைக்கேட்ட இளையோன் முன் சென்று வினவியறிந்து இராமன்பால் மீண்டு, "நிமிர்ந்த கூட்டச் சுற்றமுந் தானும் உள்ளந் தூயவன், தாயின் நல்லன், எற்றுநீர்க் கங்கை நாவாய்க் குகனொருவன் நின்னைக் காணக் குறுகினன்" என்றான்.

அண்ணலும் விரும்பி அக்குகனைத் தன்பால் வருவிக்க அவனும் விரைந்து புக்குக் கண்ணனைக் கண்ணினோக்கிக் களித்துத் தன் இருண்ட குஞ்சி மண்ணுறப் பணிந்து மெய்வளைத்து வாய்புதைத்து நின்றனன். "சண்டிருத்தி" என இராமன் ஆதனமளித்தும் அவன் அமர்ந்திலன். எல்லையற்ற அன்பினனாய்த் தான் கொணர்ந்த தேனும் மீனும் இதுவென நீட்ட, இராமன் அருகிருந்த தவசியர்களை நோக்கி முறுவல் செய்து, "உள்ளன்புக் காதலால் கொணர்ந்த வென்னின் அமிர்தத்தினுஞ் சிறந்ததாகும், பரிசுத்த முடையவை அவை; என்போன்றவர்களுக்கு உரியனவும் ஆகும். ஆதலின், அவைகளை இனிது யான் உண்டதாகக் கொள்" என உவந்துரைத்து அன்றுபோய் மறுநாள் கங்கையைக் கடப்பதற்கு நாவாயுடன் வரும்படி குறித்தனன்.

கார்குலா நிறத்தான் கூறக்
காதல னுணர்த்து வானிப்
பார்குலாஞ் செல்வ நின்னை
யிங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வ னேன்யா
னின்னலி னிருக்கை நோக்கித்
தீர்கிலே னானதைய
செய்குவ னடிமை யென்றான்.

[மேகம்போன்ற நிறத்தையுடைய இராமன் அவ்வாறு கூற, அன்பனாகிய குகன், "உலகெலாம் விளங்கும் செல்வமுடையவனே, உன்னை இக்கோலையில் பார்த்த என் கண்களைப் பிய்த்தெறியாத கள்வனேயானாலும், உன் இடுக்கணைக் கண்டும் உன்னைவிட்டுப் போக மனங்கொள்ளேன். ஆதலின்,

ஐயனே, உனக்கு யான் என்னால் ஆனவரையில் அடிமை செய்வேன் என்றான்].

எண்ணருளி ஏழைமை துடைத்து எழு மெய்ஞ்ஞானக் கண்ணருள்செய் கண்ணனை இருகண்ணின் எதிர்கண்ட குகப்பெருமானது விடை சாலச் சிறப்புடைத்து. "காளத்தி அப்பனது இன்னல் கண்டு தன் கண்களை இடந்தான் என் தொல்குல முன்னோனொருவன். அன்னவாறு செய்பலாற்றாக் கள்வனே ஆயினன் யான். ஆதலின் என்னை மிக வெறுத்து நீ இன்று அகற்றுகின்றனைபோலும். ஐயனே, இவ்வாறு செய்யற்க; கண்ணிடந் தப்ப வல்லேனல்லேனாயினும் என்னா லான அடிமையைச் செய்யப் பணித்தருள்" என்னுங் குறிப்புடைத்து இவன் மொழிகள். இக்கொள்கையை உணர்ந்த இராமன், சீதைக்கும் தன் தம்பிக்கும் இக்குறிப்பினைத் தன் நோக்கினால் தெரிவித்து, தீராக்காதலன் இக்குகன் என்பது தேர்ந்து, "யாதினும் இனிய நண்ப இருத்தி யீண்டு எம்மொடு" என்று இயம்பினான்.

இதன்பின் இராமபிரான் சீதையோடும் பல்லவப் பள்ளி சேர்ந்தபின், "எயிலுடை அயோத்தி மூதூர் எய்துநாள் இனி எய்தும்" எனத் துயிலெனும் அணங்கிற்கு நெடுவிடை தந்தனுப்பிய இளவலும் குகனும் புறங்காத்திருந்தனர். திருநாடு நீர்ந்தவாறெல்லாம் இலக்குவன் குகனுக்கு உரைத்தவாங்கே பொழுதும் விடிந்தது. கங்கையைக் கடந்தேக வோர் படகு கொணருமாறு இராமன் பணித்தலும், இராமனது அடியிணைகளைப் பிரியலாற்றாக் குகன்

பொய்ம்முறை யலராலெம் புகலிடம் வனமேயாற்
கொய்ம்முறை யுறுதாராய் குறைவிலெம் வலியேமாற்
செய்ம்முறை குற்றேவல் செய்குவ மடியேமை
இம்முறை யுறவென்ன வினிதிரு நெடிதெம்மூர்.

[வசிக்குமிடம் காடே யாதலால் நாங்கள் பொய்ம்முறையில்லாதவர்கள். கொய்து தொடுத்த மாலையையுடையவனே, குறையாத வலியுடையோம். செய்யக்கூடிய முறையில் உனக்குக் குற்றேவல் செய்வோம். இம்முறை அடியேங்களை உனது உறவெனக் கொண்டு எமதூரில் நெடிதுநாள் நீ இனிதிருக்க வேண்டுகின்றோம்.]

என வள்ளலை வேண்டப் புகுந்தனன். "அரசினைநினக்குத் தந்தேன்" என்று இராமனுக்கு அளித்த சொல்லைப் பொய்ப்பித்துக் கைகேசிக்கே கொடுத்துவிட்ட தயரதன் கொள்கையைப் பரிகசிக்க, "ஐயா, அஃது நகர்வசிப்போர் நயந்துபோற்றும் நாகரிகம் ஆகலாம்; மற்று வனமே புகலாகவுடைய எம்மனோர் பொய்ம்முறை யறியாரென்னும் உறுதியை உணர்ந்துகொள்" என்னுமிங்கிதத்துடன் தொடங்குகின்றது அவன் மொழி. பின், தேனும் தினையும் ஊனும், துணை செய்யத் தாமும், விளையாடக்கானும், புனலாடக் கங்கையும் உளதாகையால், "நாளுள தனையும் நீ இனிதிரு நட எம்பால்" என மீண்டும் வேண்டினான்.

இன்னும் பல தான் செய்வதற்கு இயன்றவைகளை இயம்பிய குகன், "உய்குதும் அடியேம், எம் குடிலிடை ஒருநாள் நீ வைகுதி யெனின் மேலோர் வாழ்விலை பிறிது" எனக் குறைநனியிரந்துநிற்ப நோக்கிப் 'புண்ணிய நதியாடிப் புனிதரை வழிபாடுற்று எண்ணிய சில நாளிற் குறுகுதும் இனிது' என்று இராமன் இயம்பி அந்த வேட்டுவ அன்பனைத் தேற்றினான். ஞெண்டிற் செல்லும் படகினில் கங்கையைக் கடந்தானபின் இராமன் தன்னுடன் தங்கவேண்டுமென்றேனும் அல்லது தானும் அவனுடன் ஏகவேண்டுமென்றேனும் குகன் மன்றாட,

அன்னவ னுரைகேளா வமலனு முரைநேர்வான்
என்னுயி ரனையாய் நீ யிளவலுன் னிளையானிந்
நன்னுத லவள்நின்கேள் நளிர்கட னிலமெல்லா
முன்னுட யதுநானுன் தொழிலுரி மையினுள்ளேன்.

[அவனுடைய உரையைக் கேட்ட தூயவனாகிய இராமன், பதில் சொல்வான்:—"என் உயிர் போன்றவன் நீ, என் தம்பி உனக்குத் தம்பி, இந்தச் சீதை நின் உறவினள். குளிர்ந்த கடலால் சூழ்ந்த நிலமெல்லாம் உன்னுடையது. நான் உனக்குத் தொழில் செய்யும் உரிமையுடையேன்]

என்று இனிதுரைத்து, "அன்புடைய இனி நாம் ஓரைவர்கள் உளரான" வாறுஞ் சொல்லி, வடதிசை வரும் அந்நாள் மீண்டு, அவனுழை தான் வருவது திண்ணமென வாக்களித்து,

அங்குள கிளைகாவற் கமைதியி னுளனும்பி
இங்குள கிளைகாவற் கியாருள ருரைசெய்யாய்
உன்கிளை யெனதன்றோ வுறுதுய ருறலாமோ
என்கிளை யிதுகாவென் னேவலினினிதென்றான்

தன்னைத் தன் சுற்றத்தோடு ஓர் வேட்டுவ பக்தனுக்களித்து, அவனை யவன் சுற்றமோடும் தான் பெற்று மகிழ்வதையுடைய வள்ளல் இராமன், பருவரலிகவாதானாலும் பணிமொழி கடவாத அக் குகன்பால் அரிய விடைகொண்டு, சீதையோடும் இலக்குமணனோடும் நெடிய காட்டின் வழிச்சென்றான்.

—§—

கந்தபுராணமும் சங்க நூல்களும்.

கந்தபுராண ஆசிரியராகிய கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் தமது அரிய பெரிய காப்பியத்தின்கண் சங்கநூற்கருத்துக்களைப் பெரிதும் பொருந்த வமைத்துக் கூறியிருக்கின்றனராகலின் அவைகளை முறையினாய்ந்து நிரலே வரையத் தொடங்குவாம்:

பொய்யற்ற கீரன்முதலாம் புலவோர் புகழ்ந்த
வையற்கெனது சிறுசொல்லு மொப்பாகு மிப்பார்
செய்யுற்றவன் மாலுமை பூசைகொடேவ தேவன்
வையத்தவர்செய் வழிபாடு மகிழு மன்றே

என்ற செய்யுளால் கந்தபுராண ஆசிரியர் சங்கநூல்களிலுள்ள நுணுகிய கருத்துக்களைத் தமது புராணத்தின்கண் திருந்த வமைத்துள்ளாரென்பது நன்கு புலனாகும். நக்கீரர் முதலாகப் புலவர்நாற்பத்தொன்பதின்மர் கடைச்சங்கத்திருந்தா ரென்பதும், அவரெல்லாம் பொய்ம்மைக் குணங்களறவே யொழித்த மெய்யுணர்வுற்ற பெரும்புலவர்களாவரென்பதும் சுவாமிகளறிந்து அவர்தம்மையெல்லாம் போற்றியுரைத்திருத்தல், மிகவும் கவனிக்கற்பாலதாம். இவ்வாறே 'மெய்ப் பலகைச் சதுபத்துரவப் புலவர்க்கு நிவிர்த்தியில் ஞான' எனத் திருப்புகழில் சங்கப்புலவர்களை அருணகிரிநாத சுவாமிகள் பாராட்டியிருத்தலை யறிக.

முருகக்கடவுள் மண்ணியாற்றின் தென்கரையில் விசுவகருமனைக்கொண்டு ஒரு நகரம் நிருமித்துக் குமாரபுரியென வழங்கும் அந்நகரில் எழுந்தருளியிருந்தாரென்ற சந்தர்ப்பத்தில் முருகப்பிரானது திருமுகமண்டலத்தின் திவ்யவொளியை வருணித்த நம் கவிஞர்பிரானது ஆற்றலை நோக்குவாம்.

ஆன காலையி லறுமுகப் புங்கவ னமல
மேனிசேரொளி நிலவொடு கங்குலை வீட்டிப்
பானு மேவரு மெல்லெனச் செய்தலிற் பரமாம்
வான நாயகன் கயிலைபோன் றிருந்தவ் வையம்'

[அச்சமயத்தில் ஆறு திருமுகங்களையுடைய குமாரக் கடவுளினது நிர்மலமான திருமேனியில் பொருந்திய தெய்வவொளியானது சந்திரகாந்தியையும் இராத்திரியையும் அடக்கிச் சூரியன் பொருந்தி விளங்கப்பெற்ற பகற்பொழுது போலச் செய்ததனால் (அப்பொழுது) அந்நிலவுலகம் பரம்பொருளாகிய தேவாதிதேவனான சிவபிரானது திருக்கயிலாயத்தை யொத்திருந்தது.]

இச்செய்யுளின்கண் குமரப்பெருமானது குற்றமற்ற திருமேனி, சந்திரப் பிரகாசத்தோடு கூடிய இருளையோட்டுந் தகைமையதென்றும், சூரியன் பொருந்தப்பெற்ற பகற்காலம்போல ஒளிசெய்யுந்தன்மையதென்றும் இரண்டு விடயங்கள் தெரியக்கிடக்கின்றன. இப்படியானதால், அவ்வொளி பரம்பொருளாகிய தேவாதி தேவன் சிவபிரானது திருக்கைலாசத்தையொத்திருந்தது என்ற உவமைத்தொடர் மூன்றாவது விடயமாக இக்கவியிற் சொல்லப்பட்டுளது. முன்னர்க் குறித்த இரண்டு விடயங்களும் எந்நூலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன வென்பதை யினிக் கவனிப்போம்.

'உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி'

என்பது திருமுருகாற்றுப்படை.

[ஆன்மாக்கள் மகிழும்படி யெழுந்து (மகா மேருகிரியைப்) பிரதக்கிணஞ் செய்யும் பல சமயத்தாரும் புகழும் சூரியன் கடலினிடத்தே காணப்பட்டாற்போல (இருவகையிந்திரியங்களும் தாங்கள் செல்லுதற்குரிய பொருளினிடத்தே சென்று தங்குதலில்லையாம்படி, கண்களைமூடி மனதினாலே) பார்க்கப்படும் பிரகாசிக்கின்ற ஒளி—என்பது நச்சினார்க்கினியருரையை யொட்டிய ஆறுமுகநாவலரதுஉரை.]

ஓவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி என்பது, ஓவறவிமைக்கு மவிரொளி யெனவும், சேண்விளங்கொளி யெனவும் பிரித்துக்கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது. ஓ என்பது முதனிலைத் தொழிற்பெயர். இருவகை யிந்திரியங்களாவன—ஞானேந்திரியமைந்தும் கர்மேந்திரிய மைந்துமாம். இமைத்தல் - கண்களின் இதழ்களிரண்டையுங் குவித்தல்; இமைக்கும் எனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார். "ஞாயிறு கடற்கண்டாஅங் கோவற விமைக்கும் அவிரொளி' என்னும் வாக்கியம், தன்னைக் கண்ணால் நோக்குவோர்களுக்குப் புறவிருளை நீக்கும் சூரியன் போலத் தம்மை மனத்தால் நோக்குவோர்களுக்கு அகவிருளை நீக்கும் ஒளி எனப் பொருள்படுதலால் தொழிலுவமையும், 'ஞாயிறு கடற்கண்டாஅங்குச் சேண்விளங்கொளி' என்னும் வாக்கியம் பசுநிறத்தையுடைய கடலின்மீதே விளங்கும் செந்நிறத்தையுடைய சூரியன்போலப் பசுநிறத்தையுடைய மயிலின் மீதே விளங்கும் செவ்வொளியினை யுடையவர் எனப்பொருள்படுதலால் பண்புவமையும் கொள்ளக் கிடந்தமை காண்க—என்பது யாழ்ப்பாணத்துநல்லூர் ஆறுமுகநாவலரவர்களது நச்சினார்க்கினியருரையை யொட்டிய குறிப்புரை.

'மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுகம்'

[ஒரு முகமானது, பெருமையாகிய இருளையுடைய உலகம் குற்றமில்லாமல் விளங்கும்பொருட்டுப் பலகிரணங்களையும் தோற்றுவித்தது.-நச்சினார்க்கினியருரையை யொட்டிய ஆறுமுகநாவலரவர்களது உரை.]

உயர்தனிப் பெரும்புலவராகிய நக்கீரனாரது திருமுருகாற்றுப்படையின்கட் போந்த மேற்குறித்த தொடர்களை யொட்டியே கந்தபுராண ஆசிரியரும் மேலே குறித்த 'அமலமேனிசேரொளி நிலவொடு கங்குலை வீட்டிப் பானுமேவரு மெல்லெனச் செய்தலில்' என்ற தொடரிற் காணப்படும் இரண்டு விடயங்களைக் குறித்தா ரென்க. இவ்வாறே பிற புலவர்பெருமக்கள் வருணித்திருப்பது ஈண்டைக்கு நோக்கத்தக்கதாம். 'உததியிடை கடவுமா கதவருண குலதுரக வுபலளித கனகரத சதகோடி சூரியர்கள், உதயமென வதிகவித கலபகக மயிலின்மிசை யுகமுடிவி னிருளகல வொரு சோதி வீசுவதும்' என்பது அருணகிரிநாத சுவாமிகளது திருவகுப்பு (ஸ்ரீபாதவகுப்பு).

'பாயிருள் பருகும் பல்கதிர்க் குழவி
ஞாயிறு சுறவெறி நாண்முரி திரைமுகட்
டெழுவது போல மழைதழை கலாபச்
செறிமயிற் சிறையார் பொறிமயிற் புறத்துச்
சேயொளி மேனி திகழவீங் கெழுந்தனை'

என்பது இலக்கணக்கொத்துஇயற்றிய புலவர்திலகராகிய ஸ்ரீல ஸ்ரீ சுவாமிநாத தேசிகரவர்களது அரிய வாக்காகும். 'மாக்கட னிவந்தெழுதரு செஞ்ஞாயிற்றுக் கவினை' என்பது புறநானூறு.

கைலாசம் எல்லா ஒளிகளையுமடக்கித் தன் ஒளியே மிக்கு வீசப் பெறுதலால், அது சந்திரன் நக்ஷத்திரம் முதலிய வொளிகளை யடக்கி மிகவும் பிரகாசிக்கின்ற சுப்பிரமணியனது திவ்விய தேஜஸினால் விளக்கம் பெற்ற உலகத்துக்கு உவமை கூறப்பட்டது. வான நாயகன் கைலையின் றன்மையை 'பாச நீக்கித் தன்பாற்படு நல்லருள், ஈசன் நல்குமியல்பென வெய்தினோர், தேசு மாற்றிச் சிறந்ததன் மெய்யொளி, வீசுகின்றது வெள்ளியங் குன்றமே' என்ற உற்பத்தி காண்டத்திலுள்ள திருக்கயிலாயப் படலச் செய்யுளால் உணர்க.

பரமேஸ்வரன் தன்னைச்சரணமாக அடைந்த பக்தர்களது மும்மல பாசங்களையு மறவேயொழித்து அவர்கட்குத் தன்னிடத் தியல்பாயுள்ள பொருளை வழங்குமாபோல, அவனுக்குகந்த இடமாயுள்ள கயிலாயமும் தன்னையடைந்தோரது ஒளியனைத்தையு மொழித்துச் சிறந்த தன் மெய்யொளியையே வீசாநிற்குமென்பது இச்செய்யுளின் உரைக்கருத்து. இதனால் ஏனைய கிரிகள் போலாது தன்னை யடைந்த அன்பர்களது அகவிருள் புறவிருள் உளப்பட வனைத்தையும் போக்கித் தன் மெய்யொளியைக் காந்துகின்றதென வருணித்த ஞானநயம் நுணுகியறிதற்பாலதாமென்க. முருகப்பிரானது திருமேனியினொளியைப் பெற்ற உலகமும் இவ்விரண்டுஇருளையும் ஒருங்கே நீங்கப்பெற்றதென்பதனைப் பொருத்தமாக இத்தகைய உவமை கொடுத்து வருணித்த பான்மை மிகவும் பாராட்டற்பாலது. கைலாய வருணனைச்செய்யுள் உற்பத்தி காண்டம் கயிலாயப்படலத்துளது; முருகப்பிரானது

திருமேனியின் பொலிவைப் பற்றிய பாசுரம் ஷை காண்டம் குமாரபுரிப் படலத்துளது. இடையே பல செய்யுட்களுள. பருந்தின் வீழ்வாக மேற்குறித்த இரண்டுசெய்யுட்களையும் புராண வாசிரியர் அமைத்திருப்பது கவனிக்கற்பாற்றும். 'ஆற்றொழுக் கரிமா நோக்கம் தவளைப்பாய்த்துப் பருந்தின்வீழ் வன்ன சூத்திர நிலை' என்றவற்றுக்கிணங்க ஆன்றோர் நூல்களின்கட் செய்யுட்கள் கோப்புண்டிலங்கக் காணலாம். பருந்தின் வீழ்வு பொருந்த இச்செய்யுட்களின் நயம் காணுக்கால் பொருணயம் நன்கு செறிதலில்லையாம். ஆகாயத்தில் வட்டமிடும் பருந்து தன் கீழ் நிரலே பல்பொருள்க ளிருப்ப அவற்றின்கட் டன் மனத்தைச் செலுத்தாது தரையினிடத்துள்ள கோழிக்குஞ்சு காடையாதிய இரைப்பொருள்களையே கவனிப்பதுபோல, ஓர் நூலில் ஓரிடத்துள்ள செய்யுள் தன்னை யடுத்துள்ள பல செய்யுட்பொருளைத் தழுவாது, சேய்மைக்கணுள்ள செய்யுட்பொருளைத் தழுவுதலையே பருந்தின் வீழ்வென்பர். சங்கநூற் கருத்தைத் தழுவினரேனும் தன் ஆற்றல் தோன்றப் பொருத்தமான உவமைகொடுத்து வருணித்துப் போந்தது சாலவும் மதித்தற்குரியதாம். இதனல் சிவசொரூபமே சுப்பிரமணிய சொரூபமுமாம் என்ற நுணுகிய கருத்து உள்ளாக விளங்குதல் கண்டுகொள்க.

(தொடரும்)

முருகன் நாமம்.

சங்கரன் மகனே
சரணஞ் சண்முகனே
எங்கணு யகனே
இனிதருள் சுதனே 1.

அம்பிகை பாலா
அரகர வேலா
கிண்கிணிக் காலா
இளரனு கூலா 2.

ஐங்கரன் தம்பி
ஆளுடை நம்பி
இங்குயா னம்பி
னேத்துவேன் நம்பி 3.

அரிதிரு மருகா
அறிஞர்க ளருகா
ஒருதிரு முருகா
ஒளிமயிற் குருகா 4.

வீரனுக் கண்ணு
வேங்கடக் கண்ணு
சாறு கண்ணு
என்னிரு கண்ணு 5.

பன்னிரு வாகா
பாவியைக் காகா
கன்னியர் பாகா
நல்லத்தமிழ் தியாகா 6.

ஆறிரு தோளா
அருள்மலி தாளா
ஆசெரி நாளா
அருளரு ளாளா 7.

பன்னிரு கையா
பதமரு ளையா
மின்னுமிழ் மெய்யா
வேன்முரு கையா 8.

நன்மலை நாதா
நவிலகன் ஞதா
மன்னிய தாதா
மனமிரங் காதா 9.

செந்தமிழ்க் குரவா
தேமலர்க் குரவா
அந்தமி லுரவா
அடியிணை தரவா 10.

கதிரையில் வாசா
கருணையுல் லாசா
அதிபவ நாசா
அறமுக வீசா 11.

நல்லையிற் கந்தா
ஞான சம்பந்தா
வல்லயிற் குந்தா
மறுவிலின் பந்தா 12.

(வேறு)

இந்தணியுஞ் சுந்தரற்குக் குருவே
எங்கு நிறைந்தின்ப மருளுருவே
அந்தமி லழகொழுகு முருவே
அன்பருக் கருள்சுரக்குந் தருவே 13.

சூருடலறுத்த சுடரயிலா
சோதிநடனக் கலபமயிலா
சேருயிரிருட் கொளிசெய்வெயிலா
தேவருறை தென்பழனிச் சயிலா 14.

செந்தமிழ் கமழும்மணி வாயா
செந்திபரங் குன்றிலமர் நேயா
அந்த மவுணர்க் கருளுந்தூயா
ஆதரித் தெனைக்க வருவாயா 15.

அன்பருளச் செங்கமலத் தேனே
ஐயவுனைக் காண வலந்தேனே
துன்பழிசு டரிலைவேற் கோனே
தோகை மயிலேறு தம்பிரானே 16.

எங்குமணக்குங் கடப்பந் தாராய்
இணையடி யிரண்டு மினித்தாராய்
தங்குமுளத் தன்பிலரைச் சாராய்
சண்முக குகமுருகப் பேராய் 17.

அண்டருக்கு வாழ்வுதரும் தேவே
அன்பரகத்தே மலரும் பூவே
கண்டருக்குஞ் சொற்குறத்தி கோவே
சதியருளுங் கற்பகப்பூங் காவே 18.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

கவனிக்க "சுத்தவைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாமுதிர்

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவவம்ருதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்டேஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

லிமிடெட். ஸோல் ஏஜண்ட்: குன்வர்ஸ், மதுரை.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.
நஞ்சன்கூடு பல்பொடி
பிராஞ்ச: மதுரை. காஞ்சீபுரம்.

ASOKA SALT

அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

(அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய் வராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்முகச் சீரணஞ் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவதுபோலவே பொங்கி வரும்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

அசோக கம்பெனி லிமிடெட்,

சென்னை.

:: உத்தம தோழன் ::

அறியாமையினல் ஆபத்தில் அகப்பட்டு அல்லலுறும் காலத்தில் உங்கள் இலக்கணங்களைப் போக்கி இராஜவழியென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இனமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

— திருக்குறள் —

மூலமும் சொற்றுறிப் பகராதியும்

விஷய ஒப்புக்குறளும்

(வா. மாக்க சகாயம் செட்டியார் பதிப்பு)

செற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது. மாணக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

சுதந்திதை] நாஷனல் [1906.

இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ்,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

இந்தியர்களால் நடத்தப்படும் கம்பெனிகளில் தலையாயது

1930 வருஷாந்திர ரிபோர்டின் சுருக்கம்.

1930 வருடம் நிறைவேறிய புது பிஸினெஸ்	ரூ. 1,13,55,069.
1930 வருடத்தில் அதிகமான லைப் அஷ்யூரன்ஸ் பண்டு	11,51,818.
பிரீமியம் வரும்படி	30,83,936.
1930 வருடத்தில் கிடைத்த வட்டி வரும்படி	7,47,608.

மொத்த அஸ்ஸெட், ரூ. 1,65,00,000க்கு அதிகம்

1930 வருடத்தில் நடைமுதலிலிருக்கும் லைப் அஷ்யூரன்ஸின் மொத்தம் 6,55,70,916.

பிரீமியம் மிகக்குறைவு, பாலிஸி நிபந்தனைகள் மிகவும் தாராளமானவை. எல்லாவித லைப் அஷ்யூரன்ஸ்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஏஜென்ஸி எடுத்துக்கொள்வது உங்களுக்குஇலாபமாகும்

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தசாமி, B. A. செக்ரடரி, மதராஸ் பிராஞ்ச். R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

[illegible] நாஷனல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ்,
7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

[illegible] கேட்போருக்கு விவரங்கள் அனுப்பப்படும்.

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றுவது ஆண்டு நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா	ரூ. 2 0 0
வெளி நாடு "	ரூ. 2 8 0

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணு 5. வேண்டுவோர், ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசிய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு சலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தங்கசாலை...
...பேட்டை போஸ்ட், மதராஸ்.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :— கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஒதற் பிரிவுவரை. கட்டுரைகள் 18.
4. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
5. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
6. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
7. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப் பட்ட கட்டுரைகள் 20.

மலர்வனம் பழமுதிர்சோலை, மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரடரிக்நீஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
2. அப்பர்:—கட்டுரைகள் 50
3. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
4. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
5. அகப்பொருள் வரலாறு:—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
6. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
7. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
8. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
9. நம்மாழ்வார் வைபவம்:— கட்டுரைகள் 12.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

3-வது வால்யூம் 1930-ஆம் ஆண்டுப் பிரதிகள்.

1. கம்பராமாயணம்:— மந்திரப்படலம், மந்தரை சூழ்ச்சிப் படலம் கட்டுரை 48.
2. குறுந்தொகை:— 400 பாட்டுகளும் உரையுடன் 34.
3. தமிழ்ப்பாடம்:—கிருஷ்ணன் தூது, நைடதம், நளன் தூதுப் படலம். இலக்கணம் புணரியல் முற்றுப்பெற்றது.
4. அப்பரும் 64 கலைகளும்:—36.
5. நம்மாழ்வார் வைபவம்:—34.
6. இலஞ்சிப்பாவை:—இதழ்கள் 24.
7. ஆச்சரிய சூடாமணி:—(ஒரு மொழிபெயர்ப்பு நாடகம்) 15.
8. மானதசாத்திரம்:—(நடத்தை) 32. மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், சிறு கதைகள், மலர்வனம், பழமுதிர்சோலை, மாதவிமாதவம் ஆகிய பல கட்டுரைகள்.

மேற்கூறிய மூன்று வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்படட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பையிண்டு செய்யாதது	8	8	0	பையிண்டு செய்யாதது	10	0	0
காலிகோ கில்ட்	10	0	0	காலிகோ கில்ட்	11	8	0
ஆப்லெதர் கில்ட்	10	8	0	ஆப்லெதர் கில்ட்	12	0	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

வர்த்தமானம்

பம்பாய்க் கவர்னரைச் சுட்டுக்கொல்லமுயன்ற வசுதேவகொகட் என்னும், கல்லூரி மாணவனுக்கு எட்டு வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

***

ஜெர்மன் நாட்டில் கலியாணமானவர்களில் 100-க்கு 40 பேர் மக்கட்பேறில்லாதவர்களாயிருக்கிறார்களாம். இதனால் அந்நாட்டில் பிரஜோற்பத்திக் தடைமுறை பரவி வருகின்றதென்றும், இனியும் வளருமேல் ஜெர்மனியில் பொருளாதார நன்னிலை ஏற்படுமென்றும், பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர்.

***

ஹாலண்டில் வசித்துவரும் ஜெர்மன் கெய்சர் ஓய்ந்த நேரங்களில் மரங்களை வெட்டுகின்ற வேலையை மேற்கொண்டுள்ளாராம். அவர் வசிக்கும் மாளிகையில் உள்ள மரங்களெல்லாம் வெட்டப்பட்டுப் போயின. இனி வெட்டுவதற்கு மரங்களில்லாது போகவே, மரம் வெட்டவேண்டிய வேலையிருப்பின் தமக்குச் சொல்லும்படி கெய்சர் சினேகிதர்களைக் கேட்டுக்கொண்டிருக்கின்றாராம். கெய்சர் காலை 6-மணிக்கு எழுந்து 8-மணிவரை நடப்பாராம். பின்னர் தெய்வ வழிபாட்டை முடித்துக்கொண்டு 9-மணிக்குச் சாப்பிடுவாராம். பிறகு பகற்சாப்பாடு வரையில் மரம் வெட்டிக்கொண்டிருப்பாராம். மாலையில் டென்னிஸ் ஆடுவாராம்.

***

உடல்நல இரகசியம் :—ஜெர்மனியின் எல்லைப்புற நாடான ஜெக்கோஸ்லேவக்கியா என்னும் குடியரசு நாட்டின் தலைவர் உடல்நல இரகசியம் என்று எழுதியுள்ள கட்டுரைச் சுருக்கம் வருமாறு :—“எனக்கு இப்பொழுது வயது 82. இன்னும் நான் இளமையோடு இருக்கின்றேன். 35 வயதுடைய இளைஞனைப் போல் வேலை செய்கின்றேன். கண்ணொளி குறையவில்லை. செவியின் நுண்மையும் கெடவில்லை. என்னைப் பலர் கண்டு ஆச்சரியப்பட்டு இவ்வயதில் இந்நிலைக்குக் காரணம் யாதென்று கேட்கின்றனர். இக்கேள்விக்கு விடை சுலபமானதே. நான் தேகப்பயிற்சி இன்னும் செய்து வருகின்றேன். நான் காற்றிலும் வெயிலிலும் அதிகம் அலைகின்றேன். நான் அடிக்கடி ஸ்நானம் செய்ய அஞ்சுவது கிடையாது. சூரியன் ஒளியும் தண்ணீரும் காற்றும் மனிதனைத் திடகாத்திரனாகச் செய்யும் பெற்றியன. நான் மிதமாகவே உண்கின்றேன். எனவே நோய் என்பது என்னை அணுகுவது கிடையாது. இவைதான் உடல்நல இரகசியம். இவ்வழி பற்றியவர் என்னைப்போல் வாழ்வர்.

***

ரவுண்டேபில் மஹா நாட்டுக் கூட்டம்:—செப்டம்பர்மாதம் 14-ந்தேதியன்று லார்ட் சாங்கி என்பாரின் தலைமையில் வட்டமேஜை மஹாநாட்டுப்பெடரல் கமிட்டி கூடிற்று. அக்கூட்டத்தில் காந்தி அடிகள் பேசியதின் சுருக்கம் வருமாறு:—

“காங்கிரஸின் ஆணையைபெற்று இங்கிலாந்தின் விருந்தினனாக நான் இப்பொழுது வந்துளேன். இம்மஹாநாட்டுப் பிரதிநிதிகள் இந்திய அரசியல்வளர்ச்சி விஷயமாய் அனுதாபங் காட்டுவார்களாயின், நான் சந்தோஷத்துடன் ஒத்துழைக்கச் சித்தமாயிருக்கின்றேன். காங்கிரஸ் ஒரு சிறுபான்மைபாருடை [illegible] மன்று. இந்திய மஹாஜனங்களின் பிரதிநிதிச் சபை. ஏழைகளின் நலமே அதன் நோக்கம். மனிதர்களுக்குள், எச்சாதியினராயினும் மதத்தினராயினும் ஒற்றுமையும் சகோதரத்துவமும் ஏற்படவேண்டுமென்றே காங்கிரஸ் உழைத்து வருகின்றது. டாக்டர் பெஸண்டும், ஸ்ரீமதி சரோஜினியும் காங்கிரஸில் தலைமை பூண்டனர். எனவே பெண்ணுரிமையைக் காப்பதும் காங்கிரஸின் நோக்கமாகும். இத்தகைய தூய நோக்கமுடைய காங்கிரஸின் பிரதிநிதியாக நான் வந்துளேன்.

“இதற்குமுன் கூடிக்கலைந்த வட்டமேஜை மஹாநாட்டின் நடவடிக்கைகளையும் பிரதம மந்திரியின் அறிக்கையையும் நான் படித்தேன். அந்த அறிக்கை மிகவும் பிற்போக்கானது. காங்கிரஸின் குறைந்த கோரிக்கைக்கும், மந்திரியார் அறிக்கைக்கும் இருக்கின்ற தூரம் இந்தியருக்கு அதிகம் நம்பிக்கை தரும் என்று தோன்றவில்லை. எனவே இந்திய சுதந்திரப் பாதுகாப்புக் குரியபடி வேலை செய்யவேண்டியது என் கடமையாகும்.

“காங்கிரஸ் பூரண விடுதலை பெற விழைவதுபற்றி நான் ஒருவார்த்தை சொல்ல விரும்புகின்றேன். அகங்காரத்தினால்காங்கிரஸ் பூர்ணவிடுதலையைப்பெறவிரும்பவில்லை. பிரட்டிஷ் சம்பந்தம் ஒழிந்துபோகவேண்டும் என்னும் எண்ணமும் எங்களுக்கு இல்லை. பூர்ண விடுதலையடைந்த இந்தியாவும் விடுதலையுடைய நாடான பிரிட்டனும் ஒன்றுக்கொன்றுதுணையாய் அமையவல்ல நட்பு இருதேசங்களுக்குமிடையே ஏற்படவேண்டுமென்பதே காங்கிரஸின் விழைவு. பிரிட்டிஷ்பிரஜைஎன்று நான் ஒரு காலத்தில் பெருமையடைந்தது உண்டு. ஆனால்இப்பொழுது பிரிட்டிஷ்ஏகாதிபத்தியப்பிரஜையாயிருப்பதைக் காட்டிலும் ஒரு கலகக்காரன் என்று அழைக்கப்படுவதையே விரும்புகின்றேன். ஏகாதிபத்திய சம்பந்தத்தை நாங்கள் இப்பொழுது விரும்பவில்லை. நட்பினால் இருநாடும் பிணைப்புறுவதையே நாங்கள் வேண்டுகின்றோம்.

“கத்தியின் முனைகொண்டு இந்தியாவை அடக்கியாளவல்ல சக்தியை இங்கிலாந்து பெற்றுளது. ஆனால் இங்கிலாந்திற்கு நன்மை பயக்கவல்லது சுதந்தர இந்தியாவோ அல்லது அடங்கியிருக்கும் இந்தியாவோ என்று பிரிட்டிஷ் ராஜதந்திரிகளைக் கேட்க விரும்புகின்றேன். இந்தியா சுதந்தரம் பெறுவது இங்கிலாந்தின் நன்மைக்கும் பெருமைக்குமே யாகும்.

“இனிப் பொருளாதார விஷயமாக ஒரு வார்த்தை கூற விரும்புகின்றேன். ஒரு வியாபாரக் கம்பனி அந்த வியாபாரத்தை வேறு ஒருவரிடம் விட்டுச் செல்லுங்கால், கணக்குகளைக் காட்டி முடிவுசெய்துகொள்ள வேண்டுவது அவசியமல்லவா; எனவே இந்திய அரசியல் மாற்றம் ஏற்படும்பொழுது இந்தியாவிடம் வரவு செலவு விஷயம் முடிவு செய்துகொள்ள வேண்டுமல்லவா ? இந்தியாவின்பொருட்டுப் பிரிட்டிஷார் பட்டுள்ள நியாயமான எல்லாக்கடன்களையும் இந்தியா ஏற்றுக்கொள்ளும். ஆனால் அநியாயமான கடன்களை இந்தியாமீது பிரிட்டிஷார் சுமத்தமாட்டார்கள் என்று நம்புகிறேன். இதுவிஷயமாகவும் ஒரு முடிவு ஏற்படவேண்டும். இவ்விஷயங்களில் காங்கிரஸின் ஆணைகட [illegible] வின் நலங்கருதி உழைக்கவே நான் [illegible].”

188935

KALANILAYAM
REG. NO., M 2324.

—:வைத்திய ரத்ன :—
பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்
ESTD 1898
“ஜீவாமிருதம்”

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப்போக்கி, தேக பலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது
எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0
ஆயுர்வேதாஸ்ரமம்
தபால் பெட்டி. 287. மதராஸ்.
கேட்லாக் இனம்

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ 18—0—0
சா[illegible] அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0
தமிழ்-தமிழ்-ஆங்கிலம்
வி. விசுவநாத பிள்ளை இயற்றியது.
676 பக்கங்கள் கொண்டது.
ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலாநிலையம்,
புரசைவாக்கம், சென்னை.

- சோப்புகளில் ராஜா -
நாடறிந்தது நல்வரவேற்கப்படுவது
: சிலாக்கியமானது :
டாக்டர் டிராலியின்
- லயன் சோப் -

பார்வைக்கு உன்னதமும், உயர்தரமும் ஆனது.
அதேபோல் உழைப்பிலும் மேலான குணம் நிறைந்தது.
ஒரு கட்டியாவது இரு கட்டியுள்ள பெட்டியாவது வாங்குக.
- - எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும் - -
Sole Agent:—
A. V. R. A. ADYCAPPA CHETTY,
52, Bunder Street, Madras.

முத்தும் பவழமும்
ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் — விலை அணா 8.
சுகுணவதி அல்லது மனம்போல மாங்கலியம் — விலை ரூபா 1.
எளிய நடையில் எழுதப்பட்ட இனிய தமிழ்ப் புத்தகங்கள். அழகிய பல ஆட்டோன் படங்கள். உயரிய பெதர்வெயிட் காகிதம். யாவரும் படித்து இன்பமடையவேண்டுமென்றே குறைந்தவிலை வைக்கப்பட்டுளது.
விலாசம்:—ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் ஹௌஸ், மயிலாப்பூர், மதராஸ்.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்
தமிழ், இங்கிலீஷ் தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும். தேவையான புஸ்தகங்களுக் கெழுதவும்.
கே. எஸ். மணியம் அண்டு கோ., புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)